In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியீடு எண் : 577

செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம்

(உரையுடன்)

AKILANDESWARI PATHIGAM

(With Commentary)

மாதவச் சிவஞானயோகிகள்

அருளிச் செய்தது

சித்திரை ஆயிலியச்
சிறப்பு வழிபாட்டு விழா மலர்

திருவாவடுதுறை ஆதீனம், மே - 2008

விலை : ரூ.30.00

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்

மாதவச் சிவஞான யோகிகள்

சித்திரை ஆயிலியச் சிறப்பு வழிபாட்டு விழா மலர்

திருவள்ளுவர் ஆண்டு 2039
மெய்கண்டார் ஆண்டு 785
சர்வதாரி ஆண்டு சித்திரை மாதம் 30ம் தேதி.
(12.05.2008)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உரிமை பதிவு
வெளியீடு எண் : 577

முதற்பதிப்பு : 1971

2-ம் பதிப்பு : 2008

விலை : ரூ. 30/-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளியீடு எண் : 577

உ

சிவமயம்

திராவிடமாபாடிய கர்த்தராகிய
மாதவச் சிவஞானயோகிகள் அருளிச் செய்த
செப்பறைப்பதி

அகிலாண்டேசுவரி பதிகம்

(உரையுடன்)

இது
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து
23 ஆவது குருமகாசன்னிதானம்
சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக
பரமாசாரிய சுவாமிகள்
அவர்கள் அருளாணையின்வண்ணம்
வெளியிடப் பெறுவது

உரையாசிரியர் :
சித்தாந்த சைவமணி
த.ச.மீனாட்சி சுந்தரம் பிள்ளை
ஆதீனப் புலவர்

திருவாவடுதுறை ஆதீனம் - 2008

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆதீனம் குரு முதல்வர்

அருள்திரு நமசிவாயமூர்த்திகள்

குருமரபு வாழ்த்து

கயிலாய பரம்பரையில் சிவஞான
போதநெறி காட்டும் வெண்ணெய்ப்
பயில்வாய்மை மெய்கண்டான் சந்ததிக்கோர்
மெய்ஞ்ஞானபானு வாகிக்
குயிலாரும் பொழிற்றிருவா வடுதுறைவாழ்
குருநமச்சி வாய தேவன்
சயிலாதி மரபுடையோன் திருமரபு
நீடூழி தழைக மாதோ.

- தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy



மாதவச் சிவஞான சுவாமிகள்

சித்திரை ஆயிலியம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

C.S.S.

தவத்திரு மாதவச் சிவஞான யோகிகள்
(சித்திரை - ஆயிலியம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

BIBLIOGRAPHICAL DATA

01.	Title of the book	:	Sepparai Akilandeswari Pathikam
02.	Author	:	Mathava Sivagnana swamigal
03.	Commentary	:	T.S.Meenakshisundaram pillai.
04.	Publisher	:	Thiruvaduthurai Adheenam saraswathi Mahal Library & Research centre. Thiruvavaduthurai-609 803
05.	Publication No	:	577
06.	Subject	:	Saiva siddhantham
07.	Language	:	Tamil
08.	No. of page	:	96
09.	Edition	:	Second
10.	No. of copies	:	1000
11.	Date of publication	:	12.05.2008
12.	Paper used	:	13.7 Creamwove
13.	Size of Book	:	1X 8
15.	Printer	:	Kalyani Computer press, Kumbakonam.
16.	Price	:	Rs. 30/-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருக்கயிலாய பரம்பரை திருவாவடுதுறை ஆதீனம்

23ஆவது குரு மகா சன்னிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நூல் விவரக் குறிப்பு

01.	நூலின் பெயர்	:	செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம்
02.	ஆசிரியர்	:	மாதவச் சிவஞான யோகிகள்
03.	உரையாசிரியர்	:	த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை
04.	வெளியீட்டாளர்	:	திருவாவடுதுறை ஆதீனம் சரசுவதி மகால் நூல் நிலையம், மற்றும் ஆராய்ச்சி மையம், திருவாவடுதுறை - 609 803
05.	வெளியீடு எண்	:	577
06.	பொருள்	:	சைவ சித்தாந்தம்
07.	மொழி	:	தமிழ்
08.	மொத்த பக்கங்கள்	:	96
09.	பதிப்பு	:	இரண்டாவது
10.	மொத்தப் பிரதிகள்	:	1000
11.	வெளியீடு நாள்	:	12.05.2008
12.	பயன்படுத்தப்பட்ட தாள்	:	13.7 கீரிம் ஒவ்
13.	நூலின் அளவு	:	1x8
14.	அச்சகம்	:	கல்யாணி கணினி அச்சகம், கும்பகோணம்
15.	விலை	:	ரூ.30/-

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்

திருச்சிற்றம்பலம்

முதற்பதிப்பின்

முகவுரை

''நற்பாலர் வேண்டின் மயிலம்மை
யார்தவ நாடுகநூல்
கற்பா னசையிற் சிவஞான
தேவன் கலையுணர்க
சொற்பா லறத்துற வுன்னிலன்
னானிற் றுறக்கவிப்பா
ரிற்போகம் வேட்கிற் சிவபோக
மேவிரைந் தெய்துகவே.''

- ஸ்ரீ பாண்டித்துரைத்தேவர்.

செந்தண்டமிழ் நாட்டுச் சைவ நன்மக்கள் எல்லோரும் உய்யும்படி திருவவதாரம் செய்தருளிய திராவிடமாபாடிய கர்த்தராகிய ஸ்ரீ மாதவச் சிவஞான யோகிகளைச் சைவவுலகிலும், செந்தமிழுலகிலும் அறியாதவர் இலர்; அவர்கள் தமிழகத்துக்குச் செய்த அருளிப்பாடுகள் பல; தொண்டு என்று சொல்லுவது மரபன்று. இத்தகைய பெரியோர்கள் 100, 200 ஆண்டுகளுக்கு ஒருமுறை தோன்றி நாட்டு மக்களை நன்னிலை பெற்றுய்யும்படி பல்லாற்றானும் வழிப்படுத்துவர். ஸ்ரீ சுவாமிகள் அவதார காலம் 218 ஆண்டுகள் ஆயின. சிவபரிபூரணமுற்ற காலம் (1785) விசுவாவசு - சித்திரை- ஆயிலியமாம். இப்போது நடைபெறுவது 187 - வது குருபூசை நாள்.

வடமொழியிலேயே பிரமசூத்திர பாடியம் இயற்றியுள்ள பெரியோர் நீலகண்டர், சங்கரர், மாத்துவர், இராமாநுசர் என்னும் நான்கு ஆசாரியர்களாவார். சிவ்ஞானபோதத்துக்கு வடமொழியிலேயே உரைவரைந்தவர்கள் சூரியனார் கோயில் ஆதீனத்து ஸ்ரீ வீழிச் சிவாக்கிரயோகிகள். தமிழ்ச் சிவஞான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போதத்துக்கு ஸ்ரீ சுவாமிகள் சிற்றுரையும் பேருரையும் கண்டவர்கள். பேருரையே மாபாடியம் என்பது; இம்மாபாடியம் சிவஞானமாபாடியம் எனச் சிறப்பாகச் சொல்லப்படுதொன்றாம். இலக்கணத்துக்குத் தொல்காப்பியச் சூத்திர விருத்தியும், புராண இலக்கியத்துக்குக் காஞ்சிப்புராணமும் சிறந்த எடுத்துக்காட்டாவன.

சிவஞானபோத மாபாடியம் கற்போருக்கு உபகாரமாயிருத்தற் பொருட்டே தொல்காப்பியப் பாயிர விருத்தியும், முதற்சூத்திரவிருத்தியும்; சங்கர நமச்சிவாய புலவர் எழுதிய நன்னூல் விருத்தியில் சில திருத்தம் செய்து புத்தம்புத்துரையும் செய்தருளினார்கள். வடமொழிக் கடலும் தென்மொழிக் கடலும் நிலைகண்டு உணர்ந்தவர்கள் ஆகலின், வடமொழி இலக்கணத்தோடும் பாதஞ்சல மாபாடியத்தோடும் ஒப்புநோக்கி உயர்வுகாட்டித் தமிழ் மொழிக்குத் தனிப்பெருமை வழங்கியிருக்கின்றார்கள். தருக்க சங்கிரகம் அன்னம்பட்டீயத்தை மொழி பெயர்த்துத் தமிழில் வழங்கி இந்த அளவு தருக்கநூல் உணர்ச்சியாவது சாத்திரங் கற்போருக்கு இன்றியாமையாதது என்று உணர்த்தியருளினர். இலக்கண முறையிலும் சமயத்துறையிலும் சுவாமிகள் களைந்தெறிந்த குற்றங்கள் பல; எடுத்துக்காட்டிய உண்மைகளும் பல. சுவாமிகள் அருளிச் செய்த நூல்கள், உரைகள் முழுவதையும் நன்கு கற்றோர் இலக்கண நுட்பம், ஆராய்ச்சி அறிவு, சமய உண்மை முதலியவற்றில் மிகச் சிறந்து விளங்குவர் என்பது சொல்லாமலே அமையும். சிறு வயதிலேயே மாணவர் கற்றுச் சிறத்தற்பொருட்டு அந்தாதிகள், பிள்ளைத்தமிழ் முதலிய பிரபந்தங்களையும் இயற்றியருளினார். நூல்கள் சிறு பிரபந்தமாயினும் சமய உண்மைகள் மிகக்கொழிக்கப் பெறுவனவாம்.

இப்போது வெளிவரும் இந்தச் செப்பறைப்பதி அகிலாண்டநாயகி பதிகம் பத்துச் செய்யுட்களினும் மிகத் தெளிவாக எடுத்து விளக்கும் சமயவுண்மைகள் பலப்பல; உரைப்பகுதி நோக்கியறிக. சிவஞான பாடியம் சித்தியார் பொழிப்புரைகளில் விரித்துரைக்கும் உரைகளுக்கு இஃது ஒரு அட்டவணை போன்றது என்னலாம் படி உள்ளமையும் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'செப்பறைப்பதி' திருநெல்வேலியிலிருந்து ஏறக்குறைய 5கல் தொலைவிலுள்ள இராசவில்லிபுரத்துக்குச் சமீபமாகச் சித்திரா நதிக்கரையில் உள்ளது. சுவாமி அக்கினீசுவரர்; அம்பிகை அகிலாண்டநாயகி. இத்தலத்தில் சிவபெருமானை அக்கினிதேவன் வழிபட்டுப் பேறு பெற்றான் என்பர்.

செப்பறைப்பதி, திருநெல்வேலிக்குக் கிழக்குத்திக்கிலே ஐந்து கல் தொலைவில் உள்ளது. இவ்வூரின் தென்பால் பொருநையாறு ஓடுகின்றது. வடபால் சோலை செழித்து விளங்கும். செப்பறையில் கோயிலும், சத்திரமும், மடமும் உள்ளன. கோயிலில் அழகிய கூத்தர் சிறப்புடன் விளங்குகின்றார். மணவை மன்னன், திருத்தில்லையினின்று வந்த சிற்பியைக் கொண்டு நிருமித்த மூர்த்தியே அவர். ''செப்பறைப்பதியில் ஒரு எறும்புக்குழியினுள்ளே எறும்புகள் கூட்டமாக வந்து புகுந்த இடமே வேணுவன நாதரும், காந்திமதியம்மையும் எழுந்தருளியுள்ள இடமாம்; ''வேணுவனநாதர் கனவில் தோற்றுவித்த படியுள்ள இடம் அது என்பர். இங்குள்ள ஸ்ரீ அழகிய கூத்தருக்கு மகுடாகம முறைப்படி பூசை முதலில் நடந்தபின்பு ஏனைய மூர்த்திகளுக்குப் பூசை நடைபெறுவது வழக்கம். ஆனி உத்திரமும், மார்கழித் திருவாதிரையும் சிறப்பான விழாக்களாம். மக்கள் திரள் திரளாகப் பத்தி சிரத்தையுடன் வணங்குவதை இன்றும் காணலாம். சித்திரைத் திருவோணத்தில் ஆயிரத்தெட்டுச் சங்காபிஷேகம் நடைபெறுகிறது. மார்கழித் திருவிழாவில் நாடோறும் நடைபெறும் நடன தீபாராதனை சிறப்பாகத் தரிசிக்க வேண்டியது.

இத்தலத்தில் கூப்பிய கரத்துடன் சங்கு சக்கர தாரியாகிய திருமாலும், இருமுகம் ஏழுநா மூன்று பாதம் ஏழுகரங்கள் உள்ள அக்கினிதேவனும் செப்பு விக்கிரகத்தில் இருந்து பூசை பெறுகின்றனர். அக்கினி தேவன் சிவபெருமானது அழகிய திருக்கூத்துக்காண விரும்பினான். சித்திரா நதியிலுள்ள காமதேனு தீர்த்தத்தில் நீராடிக் கயிலாயநாதரை வழிபட்டு வந்தான். இறைவர் அவன் தவத்திற்கிரங்கிக் காட்சி தந்தருளினார். அக்கினியே! இதற்குத் தென்திசையில் நம்மைப் பூசிப்பாய்; அங்கே உனக்குத் திருக்கூத்துத் தரிசனம் காட்டுவோம் என்றார். அக்கினி அவ்வாறே தெற்கு நோக்கிச்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சென்று அத்தலத்தின் அருகில் தன்பெயரால் ஒரு தீர்த்தம் உண்டாக்கினான். மேல்நோக்கிச் சிவலிங்கப் பதிட்டையும், அதன் வடபால் அகிலாண்டநாயகிப் பதிட்டையும் செய்து பூசித்தான். பின்பு பொருநை நதியில் நீராடி உச்சிக்காலத்தில் ஆற்றின் வடகரையிலிருந்து தன் ஆன்மார்த்த இலிங்கத்தைப் பூசித்தான். இறைவர் அக்கினிதேவன் பூசைப் பெட்டகக் கோயிலில் உள்ள சிவலிங்கத்திலே அழகிய திருக்கூத்துத் தரிசனம் காட்டி மகிழ்வித்தருளினார். அக்கினிதேவன் வடமொழியிலே எட்டு சுலோகங்களால் தோத்திரம் செய்து வணங்கி இட்டசித்தியைப் பெற்றான். அகத்திய முனிவர், திருமால் , வாமதேவ முனிவர் முதலியோருக்கும் இறைவர் தமது அழகிய திருக்கூத்துக் தரிசனத்தை அவர்கள் விருப்பப்படி காட்டியருளினார் என்பது வரலாறு. இதன் விரிவுகள் தலவரலாறு நோக்கியறிக.

இராசவில்லிபுரம் என்பது ஒரு சிற்றூர் எனினும் சிறப்பு வாய்ந்தது. இராசவில்லிபுரம் என்பது இராசவல்லிபுரம் எனவும், ராசை எனவும் மருவி வழங்குகிறது. இது செப்பறையுடன் இயைந்து விளங்குவது ஆகலின் ''ராசைமேவிய செல்வ அகிலாண்டமென்னு மரசே'' என்று அருளப்பட்டது.

'சங்கர நயினார் கோயிலும் ஸ்ரீ ராசபுரம் என்னும் வடமொழிப் பெயர் உள்ளதாகலின், ராசை என மருவியது. இஃது இராசவில்லிபுரத்தின் மரூஉவாகிய ராசை என்பதினின்றும் வேறுபாடு புலப்பட வரராசை என வழங்கப்பெற்றதென்று தோற்றுகிறது' என்பர் டாக்டர், உ.வே. சா. அவர்கள்.

இனி, இச்சிறுநூல் வழக்கம் போலவே சித்திரை ஆயிலிய நாளில் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் குரு பூசையில் வெளிவருகிறது.

சுவாமிகள் அருளிச் செய்த பிரபந்தங்கள் முழுவதும் இவ்வாதீனத்துச் சீடர் மதுரை, இராமசாமி பிள்ளை என்னும் ஞானசம்பந்தப்பிள்ளை அவர்களால் இரண்டுமுறை (1893, 1897) அக்காலத்திலுள்ள ஸ்ரீ மகாசந்நிதானத்தின் உத்தரவுப்படி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வெளிவந்தன. அதற்கு முன்பு இவ்வாதீனத்து ஸ்ரீ தாண்டவராயத் தம்பிரான் சுவாமிகள் மாணவர் ஸ்ரீ விசுவலிங்கத் தம்பிரான் சுவாமிகளால் தனித்தனியே அப்பிரபந்தங்கள் அச்சிட்டு வெளியிடப்பெற்றன. பிரபந்தத்திரட்டிலேயுள்ள வடதிருமுல்லை வாயிலந்தாதி திருவேகம்பரந்தாதி என்னும் இரண்டு நூல்களுக்கும் மேற்படி ஞானசம்பந்தப்பிள்ளை அவர்களே உரையெழுதி வெளியிட்டார்கள். சிவதத்துவ விவேகம் என்னும் நூலுக்கு எனக்கு முன்பு இவ்வாதீன வித்துவானாக விளங்கிய ஸ்ரீ சிதம்பர ராமலிங்கம் பிள்ளை அவர்களால் உரை எழுதப்பெற்றது. ஏனைய பிரபந்தங்கள் எல்லாவற்றிற்கும் எளியேனால் இயற்றப்பெற்ற குறிப்புரைகள் ஒவ்வொரு ஆண்டிலும் சித்திரை ஆயிலியநாம் குருபூசையில் அச்சிட்டு வழங்கப்பெற்றுள்ளன. இந்த ஆண்டிலே அந்தப் பிரபந்தங்கள் யாவும் முற்றுப்பெற்றன. இதற்கு மேல் அவ்வப்பொழுது தனித்தனியே குறிப்புரைகளுடன் வெளிவந்த பிரபந்தங்கள் முழுவதும் ஒரு சேரத்தொகுத்து ஒரு கட்டிடமாக வெளிவருவதற்கு ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் கட்டளையை எதிர்நோக்கி நின்று பிரார்த்திக்கிறேன்.

இந்த ஆண்டிலேயே (1971) விரோதிகிருது சித்திரை ஆயிலியத்தில் ஸ்ரீ மாதவச் சிவஞானயோகிகள் அருளிச் செய்த செப்பறைப்பதி அகிலாண்டநாயகி பதிகம் பதவுரையுடனும்; அறுபத்து மூன்று நாயன்மார் திருநட்சத்திரங்களும், இவ்வாதீனத்துக் குருமகா சந்நிதானங்களின் திருநட்சத்திரங்களும் நிலைமண்டில ஆசிரியப்பாவானியன்ற செய்யுட்கள் இரண்டும் அறுபத்து மூவர் திருநட்சத்திர அந்தாதிக் கலித்துறையும் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளன. நிலைமண்டில ஆசிரியப்பாக்கள் இரண்டும் இவ்வாதீன வித்துவானும், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகரும் ஆகிய ஸ்ரீ சே. ரா. சுப்பிரமணியக் கவிராயரவர்கள் மாணவரும், என் தமிழாசிரியரும் ஆகிய ஸ்ரீ சு. பொன்னோதுவா மூர்த்திகளால் இயற்றப்பெற்றன. அந்தாதிக் கலித்துறை நெல்லை ஸ்ரீ நெல்லையப்ப நாவலரால் இயற்றப்பெற்றது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நாளிலே சைவநன் மக்கட்குச் சித்தாந்த சைவ சமய நெறியும், சைவ தவவொழுக்கமும் நன்கனம் நிலைபெற்று வளரவேண்டும் என்னும் திருவுள்ளக் குறிப்புடன் திருமந்திர மாநாடுகளைத் திருமந்திரம் தோன்றுவதற்குக் காரணமாயிருந்த புண்ணிய பூமியாகிய இந்தத் திருவாவடுதுறையிலே ஆண்டுகள்தோறும் மிக மிகச் சீரியமுறையில் கூட்டுவித்து நல்லோர் பலரால் விரிவுரையாற்றப் பணித்தும், திருமந்திரத்துக்குத் தொடர்ந்து உரை வரைவித்து அச்சிட்டு வழங்கச் செய்தும், சித்தாந்த சைவ மாநாடுகளை ஆண்டுதோறும் திருவெண்ணெய்நல்லூரிலே கூட்டுவித்துச் சித்தாந்த சைவ விரிவுரைகளால் பலரைச் சிந்திக்கச் செய்வித்தும், உயரிய செந்தண்டமிழ் நூல்களையும் உரைகளையும் சிறக்க அச்சிடுவித்து உலக நன்மக்களுக்கு வழங்கச் செய்தும் வரும் பெருங் கருணையுடன் சிவக்ஷேத்திர குருக்ஷேத்திர பரி பாலனங்களும், செந்தண்டமிழ் மொழிப் பரிபாலனமும், இவ்வாதீனத்திலுள்ள ஆன்றோர் வழிவழியாகச் செய்துவந்த முறையில் சிறிதும் பிறழ்வின்றித் திருநோக்கம் செய்து பாதுகாத்துச் சிவஞானச் செங்கோல் செலுத்திப் புகழையும் புண்ணியத்தையும் ஒருங்கே பெற்றுச் சிறப்புடன் இப்போது இவ்வாதீனத்து ஞானபீடத்தில் வீற்றிருந்தருளும் இருபத்து இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக சுவாமிகள் கட்டளையிட்டருளியவாறு இச்சிறு நூல் அடியேனால் எழுதப்பெற்ற பதவுரையுடன் வெளிவருகிறது.

குற்றம் பொறுத்தருளப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்,
சித்தாந்தசைவமணி -
த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை
ஆதீன வித்துவான்.

திருவாவடுதுறை ஆதீனம்
26.04.1971.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

இரண்டாம் பதிப்பின் பதிப்புரை

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் ஞானதீக்கையும், துறவும், அருளுபதேசமும் பெற்றுச் சைவத் தமிழுலகம் உய்ய இருபத்தெட்டு அரும்பெரும் நூல்களை அருளிச் செய்தவர்கள் மாதவச் சிவஞான யோகிகள். இந்நூல்களுள் முதலாவதாக விளங்குவது இந்தச் செப்பறைப்பதி அகிலாண்டேசுவரி பதிகம் ஆகும். இந்நூல் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள இராசவல்லிபுரத்தில் எழுந்தருளியிக்கும் அகிலாண்டேசுவரி அம்மை மீது பாடப்பெற்ற தோத்திரப் பாடல்கள் பத்து கொண்டதாகும். இராசவல்லிபுர்த்தின் அருகில் உள்ள ஊரே செப்பறை ஆகும். இருப்பினும் செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம் என்று நூலின் பெயர் வழக்கில் நிலைபெற்றுவிட்டது.

தோத்திரப் பாடல்களாக விளங்கிச் சித்தாந்த நுண்பொருள் விளக்கங்களைக் கொண்ட நூல் ''உலகுடைய நாயனார் கழிநெடில்'' என்பது. அதனைப் போன்றதே இந்த நூலும். இந்நூலின் ஒவ்வொரு பாவும் பன்னிருசீர் கழிநெடிலடி ஆசிரிய விருத்தமாகும். இந்நூலினைக் கற்றுத் தெளிவோர் சித்தாந்த அடிப்படைகளிலும் நுட்பங்களிலும் நல்ல புலமையுடையோராகத் திகழ்வர்.

இந்நூல் இருபத்திரண்டாவது குருமகா சன்னிதானம் அவர்களின் அருளாட்சியின் போது 1971-ஆம் ஆண்டில் சித்திரை-ஆயிலிய நன்னாளில் அஞ்ஞான்று ஆதீனப் புலவராக விளங்கிய சித்தாந்த சைவமணி சிவத்திரு. த.ச மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களின் உரையுடன் வெளியிடப்பெற்றது. அதன்பின் இப்போது இருபத்து மூன்றாவது சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அவர்களின் அருளாணையின் வ ண்ணம் சர்வதாரி ஆண்டு (2008) சித்திரை ஆயிலியச் சிறப்பு வழிபாட்டு விழா மலராகத் த.ச.மீ அவர்களின் உரையுடனேயே வெளிவருகின்றது.

உரைச்சிறப்பும், பாட பேதங்களும்

உரையாசிரியர் அவர்கள் பாடல்தோறும் பதவுரையும், பல பாடல்களுக்கு விளக்கவுரையும் தந்துள்ளார். பல அரிய சித்தாந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மைகள் உரையாசிரியரால் திறம்பட விளக்கப்பெற்றுள்ளன. அவற்றுள் 'மூலகன்மம்' குறித்த விளக்கம் குறிப்பிடத்தக்கது (பாடல்கள்: 4, 8). ஆங்காங்குச் சிவஞான பாடியம், சிற்றுரை, சிவஞானசித்தியார் - பொழிப்புரை ஆகிய உரைப் பகுதிகளை மேற்கோள்களாகத் தந்துள்ளார். அவை உரிய இடங்களில் குறிப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

முதற்பதிப்பில் பாடல் நான்கில் மூன்றாம் அடியின் ஈற்றில் 'எனை அறிந்து' என்று பாடம் உள்ளது. ஆனால் பதவுரையில் 'உனை அறிந்து' என்றே பாடம் கொள்ளப்பட்டு உரை எழுதப்பட்டுள்ளது. இலக்கணம் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்களின் உரையினைக் கண்டபோது அதனில் 'உனை அறிந்து' என்றே மூலத்தில் பாடம் உள்ளது. எனவே இந்தப் பதிப்பில் பதவுரையில் உள்ள பாடத்திற்கேற்ப 'உனை அறிந்து' என்ற பாடமே மூலத்தில் கொள்ளப்பட்டுள்ளது. இதனைப் போலவே பாடல் ஐந்தில் இரண்டாம் அடியின் ஏழாம் சீரில் உள்ள 'விறல் சுறா' என்ற பாடமும் பதவுரைக்கேற்பவும், இலக்கணம் சுவாமிகள் கொண்ட பாடத்திற்கேற்பவும் 'விறல் கரவம்' என்று மாற்றப்பட்டுள்ளது.

திருத்தம்

உரையாசிரியர் நான்காம் பாடலின் விளக்கவுரையில் மாயா மலத்திற்கு உமியினையும், ஆணவமலத்திற்கு தவிடையும் உவமைகளாகக் குறிப்பிட்டுள்ளார். உரையாசிரியரே அவ்விளக்கவுரையில் நெல்லிற்கு உமி போலவும் அநாதியே உயிருக்கு அறியாமையுளதாம் என்று எழுதியிருப்பதால் மேற்கண்ட உவமை விளக்கங்கள் இதற்கேற்பத் திருத்தம் காணவேண்டியதாக உள்ளன. ''மும்மலம் நெல்லினுக்கு...'' எனத் தொடங்கும் சிவஞான சித்தியார் செய்யுளுக்குச் சிவஞானயோகிகள் அருளியுள்ள விசேடவுரை இவ்வுண்மையினை உணர்த்தும்.

இந்நூலின் பதவுரையில் பாடல்களில் உள்ள தொடர்கள் நன்கு பிரித்து எழுதிக் காட்டப்பட்டுள்ளன. எனவே பாடல்கள் முதற்பதிப்பில் உள்ளது போல சேர்த்து எழுதப்பெற்ற நிலையில் கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கோள்களாகக் காட்டப்பட்டுள்ள செய்யுட்கள் உரையின் துணைக்கொண்டே புரிந்து கொள்ளத் தக்கவனாக உள்ளன. எனவே அவையும் அவ்வாறே சேர்த்து எழுதப்பெற்ற நிலையில் கொடுக்கப்பட்டுள்ளன. உரையினது பழைய நடையினை விரும்பிக் கற்போருக்குச் சித்தாந்த அறிவு மிகவும் வளரும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. முதற்பதிப்பில் உள்ள பிற்சேர்க்கை பகுதிகள் இப்பதிப்பிலும் கொடுக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தலம் குறித்த செய்திகள்

இராசவல்லிபுரம் தலம் குறித்த செய்திகளை முதற்பதிப்பின் முகவுரையில் காணலாம். இங்கும் சில செய்திகளை அறிந்து கொள்வோம். திருநெல்வேலியிலிருந்து ஏறக்குறைய 15 கி.மீ. தொலைவில் இத்தலம் உள்ளது. மதுரைக்குச் செல்லும் சாலையில் தாழையுத்து அருகே இத்தலத்திற்குச் செல்லும் சாலை பிரிகின்றது. தண் பொருநை நதிக்கரையில் ஸ்ரீ அகிலாண்டேசுவரி அம்மை உடனுறை சுவாமி அக்கினீசுவரர் ஆலயம் உள்ளது. இது மேற்கு நோக்கிய ஆலயம். சுவாமிக்கும் அம்பாளுக்கும் தனித்தனிக் கொடிமரங்களுடன் சந்நிதிகள் உள்ளன. சிவஞான சுவாமிகளுக்குத் தனிச் சந்நிதி உள்ளது.

நாள்தோறும் ஐந்து கால பூசைகள் நடைபெற்று வருகின்றன. நவராத்திரி தினங்களிலும், சஷ்டி தினங்களிலும், ஐப்பசி திருக்கல்யாண உற்சவம் பத்து நாட்கள், தைப்பூசம் பத்து நாட்களிலும் நைமித்திக வழிபாடுகள் சிறப்புற நடைபெற்று வருகின்றன. நால்வர் குருபூசைகள் செம்மையாக நடந்து வருகின்றன சிவஞான சுவாமிகளுக்கு நித்திய பூசையும், சித்திரை ஆயிலியத்தன்று செப்பறை மடத்தின் சார்பில் சிறப்பு அபிடேக ஆராதனைகளும் நடைபெற்று வருகின்றன. அகிலாண்டேசுவரி பதிகம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

பங்குனித் திருவாதிரைக்கு முதல்நாள் அக்கினி பகவான் வழிபட்டதனை நினைவுகூரும் முறையில் சிறப்புப் பூசைகள் அக்கினி அறக்கட்டளையின் மூலம் நடைபெறுகின்றது. இளைஞர் மன்றம், மாதர் மன்றம் போன்ற அமைப்புகள் மூலம் திருத்தொண்டுகள் அவ்வப்போது செம்மையாக நடைபெற்று வருகின்றன. கும்பாபிடேகம் எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்தேறியுள்ளது.

நம் ஆதீனத்தில் எட்டாவது குருமகா சன்னிதானம் அவர்களின் அருளாட்சியில் திருதீய ஆசாரியராக எழுந்தருளியிருந்த சுவாமிநாத தேசிகரின் வடமொழி ஆசிரியர் கனகசபாபதி சிவாச்சாரியார் செப்பறைத் தலத்தில் பிறந்தவர். தமிழறிஞர் இரா. பி சேதுப்பிள்ளை, எழுத்தாளர் வல்லிக்கண்ணன் ஆகியோர் இராசவல்லிபுரத்தில் பிறந்தவர்கள். இத்தலத்துச் சிவத்திரு. சங்கர சுப்பிரமணிய பிள்ளை அவர்களால் ‘திருவள்ளுவர் மடம்’ என்ற பெயரில் அறக்கட்டளை நிறுவப்பட்டுள்ளது. அறக்கட்டளைப் பதிப்பாக அகிலாண்டேசுவரி பதிகம் மூன்று முறை வெளிவந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூன்றாம் பதிப்பு 1993 - ஆம் ஆண்டு இலக்கணம் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் அவர்களின் பதவுரையுடன் வெளிவந்துள்ளது. இத்தலத்தைப் பற்றிய குறிப்புகள் தந்துதவிய சிவத்திரு சுந்தரம் பிள்ளை அவர்களுக்கும், சிவத்திரு சிவ.காந்தி அவர்களுக்கும், நூல் பதிப்பின் போது துணைபுரிந்த ஆசிரியர் தே. சுடலை முத்து அவர்களுக்கும் சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்களின் குருவருள் உரியது.

மாதவச் சிவஞானயோகிகளுக்குச் சிறப்பு வழிபாட்டு விழாவினை அவர்கள் தோன்றிய விக்கிரமசிங்கபுரம், துறவு பெற்ற சுசீந்திரம், நீண்ட நாள் இருந்த காஞ்சிபுரம், முத்தியடைந்த திருவாவடுதுறை ஆகிய நான்கு தலங்களிலும் சிறப்பாக நடைபெற அருளாணை செலுத்தியும், அரிய சைவ நூல்களைப் பதிப்பித்து வெளிவரச் செய்தருளியும், சித்தாந்த அறிஞர்களுக்கும், திருமுறை வாணர்களுக்கும், செந்தமிழ், வடமொழி அறிஞர்களுக்கும் விருதுகளும், பொற்கிழிகளும் அருளியும் சித்தாந்த சைவ பரிபாலனம் புரிந்தருளி வருகின்ற சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அவர்களுக்கு இவ்வாண்டு பீடாரோகண வெள்ளிவிழா ஆண்டாகும். இத்தகைய அருஞ்சிறப்பு வாய்ந்த இத்தருணத்தில் இந்த ''அகிலாண்டேசுவரி பதிகம்'' நூல் விளக்கவுரையுடன் வெளிவருதல் சைவ உலகிற்கு வரப்பிரசாதமாகும்.

சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அவர்கள் தமது பரிபாலன அருட் செய்கைக்குச் சிறியேனையும் ஒரு கருவியாகக் கொண்டருளும் பரங்ககருணையினை எந்நாளும் போற்றித் துதிப்பதன்றி வேறு கைம்மாறு அறியேன்.

இந்த அருஞ்சிறப்பு வாய்ந்த நூலினைக் கற்றும், கற்பித்தும் பயன்கொள்ள வேண்டுதல் சைவ மக்களின் கடனாகும்.

பிழைகளைப் பொறுத்தருள பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்,
சிவஞானசுவாமிகள் அடிப்பொடி
சு. குஞ்சிதபாதம்

ஆதீனப்புலவர்.
ஆறுமுக நாவலர் இல்லம்,
200, தெற்கு வீதி,
திருவாவடுதுறை - 609 803
நாகை மாவட்டம்.
அலைபேசி : 99437 02017

திருவாவடுதுறை,
23.04.2008.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

PREFACE

TiruAavatutueai Aatheenam is said to be the direct descendent in the Religio Philosophic chronological Line of Kailyaayam. Hence called as Kayilaaya Paramparai -t-Tiru Aavatuturai Aatheenam. The unique devot academic of Citthtanta Caivam, who has been underwent initiation of Naanam, renunciation and intuitive instruction at this celebrated monastry is Tiru. Maathava -c Civanaana Yokikall.

He has presented twenty-eight Tamillh works, which are meritorious in freeing the lovers of Citthtaanta Caivam from the suffering of births. Those works were written in various lines. One of them is devotional. There are many in that kind, of which Cepparai Pati Akilanteswary Patikam is the foremost one. It consists of ten devotional poems in adoration to Akilaanteswary Ammai, gracing at Rasavallipuram, near Tirunelvely. Cepparai, one of the five famous shrines for the world famous Cosmic Dancer, Aata vallaan which is situated on the south bank of the river Thann Porunai, nowadays popularly know as Tamira parani, is so close to Raasavallipuram, and so this work was named as Cepparai-p-pati Akilanteswari Patikam.

All the ten poems pronounced by the Munivar peruman explicit the main basic tenets of Caiva Citthtaanta system in a nutshell. This famous book of ten hymns with a brief elucidatory commentary written by Civattiru T.S. Meenaakshisunndaram pillai, the then Aatheena-p-Pulavar, was published in the year 1971 Citthtirai Aayilliam, the celebrated day of Tiru Maathava-c-Civanaana Swamikall, in the period of the twenty- second Head of the Atheenam.

The same book has its reprint publication in this year Citthiral Aayiliam Tirunaall, 12th May 2008, by the fracious order of the present 23rd Kuru Makaa Sannithaanam Ceer valar Ceer CivppirakaasaTecika Paramacaaria Swamikall.

We hope the Lovers to God Civa will realize the great aim of our present Kuru Maka Sannithanam and his graceful services for the happier life of the Tamillh society, and gain all the benfits come on their parts.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

செப்பறைப்பதி

அகிலாண்டேசுவரி பதிகம்

மூலமும் உரையும்

பண்டைவினை யாலும்வரு பழவினையி னாலுறு
பாழ்த்தகன் மத்தினாலும்
பாழான மாயைப் புணர்ச்சியா லுந்தொலைவில்
பலபல தநுக்கடுக்கிக்
கொண்டுசுழல் பாவியேன் செய்கின்ற பிழையெலாங்
குணமெனக் கருதியெளிதாக்
கோலங்கள் காட்டியெனை யிவ்வள வெடுத் தாண்ட
குணமேரு வேநிறைந்து
மண்டுமா னந்தவெள் ளத்தையுண் டின்புறவும்
வைப்பதென் றோவறிகிலேன்
வானாகி மண்ணாகி மற்றுளவெ லாமாகி
மறைநான்கு மறியாமலே
அண்டபகி ரண்டப் பரப்புமா யப்புறமு
மளவற்று நின்றுலாவும்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (1)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதன்பொருள்

வான் ஆகி மண் ஆகி மற்று உள எலாம் ஆகி	-	விண்ணுலகமாகியும் நிலவுலகமாகியும் மற்றும் அவ்வுலகங்களில் உள்ள நிலையியற்பொருள் இயங்கியற்பொருள் ஆகிய எல்லாப் பொருள்களுமாகியும்.
மறைநான்கும் அறியாமலே	-	வேதங்கள் நான்கும் இன்னதெனத் துணிந்து அறுதியிட்டுக் கூறுதற்கு அருமையினையுடையதாகியும்
அண்டபகிரண்டப் பரப்பும் ஆய்	-	இந்த அண்டமும் வெளியண்டங்களுமாகிய எல்லா அண்டங்களின் பரப்புமாகியும்.
அப்புறமும்	-	அவைகளுக்கு அப்பால் உள்ளனவுமாகியும்
அளவு அற்று நின்று உலாவும்	-	எல்லையில்லாமல் நிலைபெற்று விளங்கும்
அருள் ஞானவாரியே	-	திருவருள் ஞானமாகிய வெள்ளமே
ராசை மேவிய செல்வ	-	இராச வில்லிபுரம் என்னும் தலத்திலே வீற்றிருந்தருளும் செல்வமாகிய
அகிலாண்டம் என்னும் அரசே	-	அகிலாண்டநாயகி என்று புகழ்ந்து கூறப்படும் அரசியே
பண்டை வினையாலும்	-	பலப்பல பிறவிகளிலும் ஈட்டப்பட்டுச் சஞ்சிதமாய்க் கிடந்த புண்ணிய பாவங்களானும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரு பழவினையினாலும் -	சஞ்சித கன்மத்தினின்றும் பக்குவப்பட்டு அனுபவத்திற்கு வருகின்ற பிராரத்த கன்மத்தானும்,
உறு பாழ்த்த கன்மத்தினாலும் -	பிராரத்த கன்மத்தை அனுபவிக்கும் நிலையிலே மேலும் மேலும் வீணாக வந்து சேரும் ஆகாமிய கன்மத்தாலும்,
பாழான மாயைப் புணர்ச்சியாலும் -	அழிந்துபடுந் தன்மையினையுடைய பயனை விளைப்பதாகிய மாயையின் சேர்க்கையாலும்
தொலைவு இல் பல பல தநுக்கள் -	என்றும் ஒழிதலில்லாத அளவிறந்த பலவகைப்பட்ட உடம்புகளை
தூக்கிக் கொண்டு சுழல்பாவியேன் -	சுமந்துகொண்டு (சுவர்க்க மத்திய பாதலங்களாகிய எல்லா உலகங்களிலும் கொள்ளி வட்டமும் காற்றாடியும் போல ஒய்வின்றிச்) சுழன்று (பிறந்தும் இறந்தும்) வருகின்ற தீவினையையுடையேன்,
செய்கின்ற பிழை எலாம் -	செய்து வருகின்ற குற்றமுடைய செயல்களையெல்லாம்,
குணம் என கருதி -	நற்செயல்கள் இவை என்று திருவுளத் தடைத்து,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எளிது ஆ(க) கோலங்கள் காட்டி -	மிக எளிவந்து இரங்கிப் பக்குவத்திற்குத் தகத் திருமேனிகளைக் காட்டியருளி,
எனை எடுத்து -	ஒன்றுக்கும் பற்றாத புலை நாயேனையும் (பிறவிக் கடலினின்று கருணைக்கரத்தால்) தூக்கியருள் செய்து,
இவ்வளவு ஆண்ட -	இத்துணையும் அடிமை கொண்டருளிய,
குண மேருவே -	அருட்குணங்களால் மேருமலைபோலச் சிறந்து விளங்குபவளே,
நிறைந்து மண்டும் ஆனந்த வெள்ளத்தை -	எவ்விடத்தும் பரந்து தேக்கிட்டு நிற்கும் பேரின்பமயமான பெருங்கடலினை,
உண்டு இன்புறவும் -	வாய்மடுத்து நிறைய அனுபவப் பொருளாகக் கொண்டு திளைத்து இன்பமடையும் வண்ணம்,
வைப்பது என்றோ அறிகிலேன் -	நிலைபேறுடையதாக அருள்செய்தல் எக்காலமோ அதனை அடியேன் அறிய முடியாமல் *அலமருகின்றேன் (ஆகலின், அதனை நீயே கருணைகூர்ந்து அருள வேண்டும்) என்றவாறு.

* அலமருகின்றேன் - வருந்துகின்றேன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வான் - ஆகாயம். மண் - பிருதிவி. ஆகாயத்தை முன்னே கூறியது ஏனைய பூதங்களெல்லாம் தன்பால் வந்து அடங்கத் தான் இடங்கொடுத்து நிற்றலின். மற்று உள எலாம் ஆகி என்றது ஆகாயம் முதலாகப் பிருதிவி ஈறாகவுள்ள தத்துவங்களும் அதன் மேலுள்ள எல்லாத் தத்துவங்களும் தாத்துவிகங்களும் ஆகி என்பது குறித்து நின்றது என்க. தத்துவசம்பந்தம் தாத்துவிகம். பூதசம்பந்தமானவை பௌதிகம். வான் ஆகி மண் ஆகி என்றது ஐம்பெரும் பூதங்களை. பூதசம்பந்தமான பௌதிகம் அனைத்தும் நிலைபெற்றிராமல் காரண காரியப்பட்டுக் கொண்டே யிருப்பனவாம். ''பூதமானவை காரியங்கள் பொலிந்து மன்னி யழிந்திடும்'', ''உலகமெல்லாம் வருமுறை வந்து நின்று போவது'' என வரும் சிவஞானசித்தித் திருவிருத்தத்தால் அறிக.

மறைநான்கு - இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என்பன. மறைகள் நான்கும் அறுதியிட்டுக் கூறாமை:

''அல்லையீ தல்லையீதென மறைகளு மன்மைச் சொல்லி னாற்றுதித் திளைக்குமிச் சுந்தரன்'' என்பது பரஞ்சோதி திருவிளையாடல். ''எழுதரு மறைகள் தேறா இறைவன்'' என்றும் பிறிதோரிடத்தில் கூறினர். ''வேதங்கள், ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே'' என்பது திருவாசகம்.

ஏகமாகிய பிரமம் அத்துவிதமாயிருத்தலின், இன்மை மறுதலையாகக் கூறும் பொருள்கட்கு இடனாகாது ஒன்றாகாமலும், இரண்டாகாமலும் ஒன்றும் இரண்டும் இனறாகாமலுமாயுள்ள அனனியத்தை விளக்கும் அன்மைப்பொருட்கு இடனாய் நின்ற அப்பொருள் வாக்கு மனாதீதமாய் உள்ளதாகலின், 'மறை நான்கும் அறியாமலே' என்றார். ''மறையினா னயனான் மாலான் மனத்தினான் வாக்கான் மற்றும், குறைவிலா வளவினானுங் கூறொணா தாகி நின்ற, இறைவனார்'' என்றருளினர் ஸ்ரீ அருணந்திதேவ நாயனார்.

'தொலைவில் பல பல தநுக்கள்'; ''ஊர்வன நடப்பன பறப்பன செயற்கொண்டிருப்பன முதல் தேகங்கள்'' என்றார் தாயுமானவசுவாமிகள். வினைவயத்தாற் பிறக்கும் அண்டசம் சுவேதசம் உற்பீசம் சராயுசம் என்னும் நால்வகைத் தோற்றங்களும்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவர் நரர் மிருகம் பட்சி ஊர்வன நீர்வாழ்வன தாவரம் என்னும் எழுவகைப் பிறப்புக்களும்; இவற்றிலுண்டான யோனி பேதம் எண்பத்து நான்கு நூறாயிரமாக விரிந்த எல்லாவற்றையுங்கொள்க. ''அண்டசஞ் சுவேத சங்க ளுற்பீசஞ் சராயு சத்தோ, டெண்டரு நாலெண் பத்து நான்கு நூறாயிரத்தா, லுண்டுபல் யோனி'' (சித்தியார்) ''தோற்றியிடு மண்ட சங்கள் சுவேத சங்கள் பாரிற்றுதைந்துவரு முற்பீசஞ் சராயுசங்க ணான்கி, னூற்ற மிகு தாபரங்கள் பத்தொன்ப தென்று மூர்வபதி னைந்தமரர் பதினென்றோ டுலவா, மாற்றரு நீ ருறைவன நற் பறவைகணாற் காலி மன்னியிடும் பப்பத்து மானுடரொன் பதின்மர், ஏற்றியொரு தொகையதனி லியம்புவர்கள் யோனி எண்பத்து நான்குநூ றாயிரமென்றெடுத்தே'' (சிவப்பிரகாசம்).

வானாதி அட்டமூர்த்தமும், அவற்றிற்குப் பரமாகியுள்ளனவும், மற்றும் வாக்கு மனத்திற்கு எட்டுவனவும் எட்டாதனவுமாய் விரிந்து நிற்பது சிவமொன்றே யாகலின், 'வானாகி மண்ணாகி மற்றுள வெலாமாகி' என்றார். சிவபெருமானோடு பராசத்தியாகிய அம்மை பிரிவின்றி நிற்றலின் அதனை அம்மையார் மீது வைத்துக் கூறப்பட்டது. இதனை, ''தானே கடன்மலை யாதியு மாய் நிற்கும். தானே திசையொடு தேவரு மாய்நிற்கும், தானே யுடலுயிர் தத்துவ மாய்நிற்கும், தானேயுலகிற் றலைவனுமாமே.'' (திருமந்திரம்: பிற நூலுரைகளால் அறியப்பட்டது). ''ஊனாயுயி ரானாயுட லானாயுல கானாய், வானாய்நில னானாய்கட லானாய்மலை யானாய், தேனார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள், ஆனாவுனக் காளாயினி யல்லேனெனலாமே. (சுந்:தே.) என்பவற்றாலறிக.

இனி, எல்லாப் பொருள்களிலும் கலந்தும் கலவாதும் இருத்தலின் எல்லாமாய் அல்லதுமாய் இருக்கும் தன்மை விளக்கியபடி; ''வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி, ஊனாகி உயிராகி யுண்மையுமா யின்மையுமாய்க், கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு, வானாகி நின்றாயை யென்சொல்லி வாழ்த்துவனே'' (திருவாசகம்); ''இருநிலனாய்த் தீயாகி நீருமாகி இயமான னாயெறியுங் காற்றுமாகி அருநிலைய திங்களாய் ஞாயிறாகி ஆகாச மாயட்ட மூர்த்தியாகிப், பெருநலமுங் குற்றமும் பெண்ணு மாணும் பிறருருவுந் தம்முருவுந் தாமேயாகி, நெருநலையா யின்றாகி நாளையாகி நிமிர்புன் சடையடிகள் நின்ற வாறே'' (திரு.நாவு. திருத்தாண்ட).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கல்லொத்த நெஞ்சராய் வாழ்வர்சிலர் புவியிற்
கறங்குசக டென்னவோடிக்
காலோய்வர் சிலர்மரப் பேய்போல நாடொறுங்
கதறுவார் சிலர்குவிந்த
வில்லொத்த நுதலினார் போகத்தை நாடியே
மெலிவர்சிலர் பசையிலாத
வெற்றென்பி னைக்கடித் தலகுபுண் ணாய்க்குருதி
விழுமதைப் பருகுநாய்போல்
சொல்லற்ற வுலகிலுறு துன்பெலாஞ் சுகமாய்த்
துடிப்பர்சில ரவர்களோடு
துடியாத வண்ணமெனை யிவ்வள வெடுத்திருட்
டொகையெலா நீக்கியெல்லோ
டல்லற்ற பேரின்ப வெள்ளத் தழுத்தியே
யசைவற் றிருக்கவைத்த
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (2)

இ - ள்:

புவியில்	-	இந்நிலவுலகத்திலே,
சிலர் கல் ஒத்த நெஞ்சர் ஆய் வாழ்வர்	-	சில மனிதர் கல்லைப் போன்ற வலிய மனமுடையவர்களாய் இரக்கம் சிறிதுமின்றி வாழ்வார்கள்,
சிலர்	-	மற்றும் சிலர்,
கறங்கு (என்ன) சகடு என்ன ஓடி	-	காற்றாடியைப்போலவும் சக்கரத்தைப் போலவும் சுழன்று திரிந்து,
கால் ஒய்வர்	-	கால் சலித்துக் கிடப்பார்கள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிலர் மரப்பேய் போல நாள்தோறும்	-	இன்னும் வேறு சிலர்,
கதறுவார்	-	மந்திரம் செபித்து ஆணி யறைந்து கட்டப்பட்டுள்ள பேய்கள் கதறுவதைப்போல நாள் முழுவதும் கதறிக் கொண்டிருப்பார்கள்,
சிலர்	-	இன்னும் வேறாகவுள்ள சிலர்,
குவிந்த வில் ஒத்த நுதலினார்	-	வளைந்த வில்லுப் போலும் நெற்றியினையுடைய மகளிரது,
போகத்தை நாடியே மெலிவர்	-	இன்ப நுகர்ச்சியை விரும்பியே (உள்ளமும் உடலும்) மெலிந்து இளைப்பார்கள்,
சிலர்	-	மற்றும் சிலர்,
பசையிலாத வெற்று என்பினை கடித்து	-	ஈரமில்லாத வீணாக உலர்ந்து கிடக்கும் தசையற்ற எலும்பைக் கடித்துக் கடித்து,
அலகு புண் ஆய்	-	ஈறுகள் புண்ணாகி,
விழும் குருதி அதை பருகும் நாய் போல்	-	ஒழுகுகின்ற இரத்தத்தைப் பருகிச் சுவைக்கும் நாய்களைப் போல்,
உலகில் உறு சொல் அற்ற துன்பு எலாம்	-	உலகத்திலே உளவாகும் சொல்லுதற்கு இயலாத துன்பங்களையெல்லாம்,
சுகம் ஆய் துடிப்பர்	-	இன்பம் என்று கருதிப் பதைப்பார்கள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவர்களோடு துடியாத வண்ணம் -	அத்தன்மைகளையுடைய மனிதர்களுடன் கூடி (யான்) பதைப்பு அடையாதபடி,
எனை -	*பவமாயக்கடலில் அழுந்துகின்ற என்னையும்,
இவ்வளவு எடுத்து -	இத்துணையும் அதன்கண் அழுந்தாத வண்ணம் கருணைக்கையாலெடுத்து,
இருள் தொகை எலாம் நீக்கி -	அறியாமையைச் செய்யும் பாசக்கூட்டங்கள் முழுவதையும் (என்பால் மீளவும் வந்து பொருந்தாதபடி) அகற்றி,
எல்லோடு அல் அற்ற -	சகல கேவலங்களாகிய பகலிரவுகள் நீங்கிய,
பேரின்ப வெள்ளத்து -	சுத்த நிலையின் கண்ணே விளைவதாயுள்ள பேரின்பக் கடலிலே,
அழுத்தி -	அமிழ்ந்து மூழ்கும்படி செய்து,
அசைவு அற்று இருக்க வைத்த -	அந்நிலையினின்று இழிந்து கீழ்ச்செல்லாமல் நிலை பெறும்படி அருளிய,
அருள் ஞானவாரியே -	அருள்மயமாக விளங்கும் ஞானப் பெருங்கடலே,
ராசை மேவிய செல்வ -	இராசவில்லிபுரம் என்னும் திருத்தலத்திலேயே வீற்றிருந்தருளும் செல்வமாகிய,
அகிலாண்டம் என்னும் அரசே -	அகிலாண்டவல்லி என்று கூறப்படும் அரசியே என்றவாறு.

பவமாயக்கடலில் - பிறவியாகிய கடலில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எடுத்தது என்றது பவத்தைக் கடலாகவும், கருணையைக் கையாகவும் குறிப்பாக உருவகஞ்செய்ய நின்றமையின் குறிப்புருவகம். நிலைபெற்ற இன்பநுகர்ச்சியே முத்தியாகலின், பேரின்ப வெள்ளத்து அழுத்தி அசைவற்றிருக்க வைத்த அருள் ஞானவாரி என்றார்.

தூலவுட லரவினது தோலென்ன நீங்கவே
சூக்குமத் தோடுயிரினைத்
துன்பமுறு யாதனா வுடலத் திருத்தியே
சுடருமெரி வாயிலிடுவார்
மேலதிற் கனலெனச் செம்பினை யுருக்கியே
விடுவர்விழி தன்னிலூசி
விம்முற விறக்குவார் நரகுதொறும் வெவ்வேறு
விதமாக வூழியூழி
காலம தழுத்துவார் தலையெழும் பிடிலுச்சி
கவிழுற வடிப்பரந்தக்
கனலொத்த யமதூதர் கையிலடி யேன்றனைக்
காட்டிக் கொடுத்திடாதே
ஆலமமு துண்டமரர் தமையாண்ட நீள்கருணை
யன்னமே யுனை நம்பினேன்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (3)

இ - ள்:

அரவினது தோல் என்ன தூல உடல் நீங்கவே	-	பாம்பினது சட்டை கழல்வது போலப் பருவுடம்பானது அகல,
உயிரினை	-	ஆன்மாவை,
சூக்கு மத்தோடு	-	நுண்ணுடம்புடனே கொண்டு சென்று,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துன்பு உறும் யாதனா உடலத்து இருத்தி	-	துன்பத்தை அனுபவித்தற்குரிய யாதனா சரீரத்தில் (யமதூதுவர்) பொருத்தி,
சுடரும் எரிவாயில் இடுவார்	-	சுவாலித்து எரிகின்ற எரிவாய் நிரயத்திலே போட்டு வருத்துவார்கள்,
மேல்	-	அதற்கு மேலே,
அதில் செம்பினை கனல் என உருக்கிவிடுவர்	-	அந்த யாதனா சரீரத்தில் செம்பை நெருப்புக்குழம்பு என்று சொல்லும்படி நன்றாக உருக்கி வார்ப்பார்கள்,
விழிதன்னில் ஊசி விம்முற இறக்குவார்	-	கண்களிலே காய்ச்சிய ஊசிகளைக் கதறும் படி அழுந்தச் செலுத்துவார்கள்,
நரகுதொறும்	-	பல வேறு வகைப்பட்ட நரகங்களிலெல்லாம்,
வெவ்வேறு விதமாக	-	பலவேறு வகைகளில்,
ஊழி ஊழி காலமது அழுத்துவார்	-	பல ஊழிக்காலங்கள் மூழ்கிக் கிடக்கும்படி அழுத்தி வைப்பார்கள்,
தலை எழும்பிடில்	-	நரகங்களில் அழுந்தியிருக்கும் தலை மேலே தூக்குமாயின்,
உச்சி கவிழுற அடிப்பர்	-	தலை கவிழும்படி இருப் புலக்கைகளால் தலைமேலே ஓங்கி அடிப்பார்கள்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்த	-	அப்படிப்பட்ட,
கனல் ஒத்த யமதூதர் கையில்	-	தீயைப்போலும் கொடிய யமதூதர்கள் கையிலே,
அடியேன் தனை காட்டிக் கொடுத்திடாதே	-	உன் திருவடிகளுக்குத் தொண்டுபட்டொழுகும் அடியவனாகிய என்னைக் காண்பித்து ஒப்புவித்திடாதே,
ஆலம் அமுது உண்டு	-	திருப்பாற்கடலிலே தோன்றிய ஆலகால விடத்தை அமுதாக உண்டு கண்டத்தடக்கி,
அமரர் தமை ஆண்ட	-	தேவர்களைச் சாவாமல் பாதுகாத்தருளிய,
நீள் கருணை அன்னமே	-	மிக்க அருள் வெள்ளமாகிய அன்னம் போல்பவளே,
உனை நம்பினேன்	-	உன்னையே நம்பிச் சரணாக அடைந்தேன்,
அருள் ஞான வாரியே	-	அருள் மயமாகவுள்ள ஞானப் பெருங்கடலாக உள்ளவளே,
ராசை மேவிய செல்வ	-	இராசவில்லி புரத்தில் எழுந்தருளியிருக்கும் செல்வமாகிய,
அகிலாண்டம் என்னும் அரசே	-	அகிலாண்ட நாயகி என்னும் திருநாமத்தையுடைய அரசியே எ-று.

இயமபயம்

''என்முன் வந்துதரு மன்னா தபோததாநர கார வருந்துகென்னாமல் .... மெய்வாழ் வருளே'' (71); ''✱மறலி வந்தனையா அது நரகு பார் என்னுமுன்'' (45); ''மலக்கு நாச்செற்றுவிக்கக் காலன் வந்து எய்துமுன்'' (72); என இவ்வாசிரியர் திருவே கம்பரந்தாதியிலும் கூறியமை காண்க.

✱ *மறலி - யமன்*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யாதனா சரீரம் சூக்கும் உடம்பின் காரியம். யாதனா சரீரம் என்றது துன்பத்தை அனுபவித்தற்குரியது. *நரகத்துன்பம் இருப்பு விலங்கும், துறக்க இன்பம் பொன் விலங்கும் போல்வன. ஆகலின், அவ்விரண்டற்கும் உரிய உடம்பை யாதனாசரீரம் என்றார். பூதஉடம்பு, பூதசார உடம்பு, யாதனா உடம்பு என உடம்பு மூன்று. இவை முறையே பூமி, சுவர்க்கம், நரகம் ஆகிய உலகங்களுக்குரியன என்க.

இப்பாடலின்கண் வேதாகமங்களிற் கூறிய விதி விலக்குகளை அறிந்து அவ்வழி நடவாதவர்கள் நமனால் தண்டிக்கப்படுவர் என்பது விளக்கப்பட்டுள்ளது. இதனை,

'' ....தான் மாள,

வெற்றிக் கடுந்தூதர் வேகத் துடன் வந்து
பற்றித்தம் வெங்குருவின் பாற்காட்ட - இற்றைக்கும்

இல்லையோ பாவி பிறவாமை யென்றெடுத்து
நல்லதோ ரின்சொல் நடுவாகச் - சொல்லியிவர்
செய்திக்குக் தக்க செயலுறுத்து வீரென்று
வெய்துற் றுரைக்க விடைகொண்டு - மையறரும்

செக்கி னிடைத்திரித்தும் தீவாயி லிட்டெரித்தும்
தக்கநெருப் புத்தூண் தழுவுவித்தும் - மிக்கோங்கு

நாராசங் காய்ச்சிச் செவிமடுத்தும் நாவரிந்தும்
ஈராவுன் னுனைத்தின் னென்றடித்தும் - பேராமல்

அங்காழ் நரகத் தழுத்துவித்தும் பின்னுந்தம்
வெங்கோப மாறாத வேட்கையராய் - இங்கொருநாள்

எண்ணிமுதற் காணாத இன்னற் கடுநரகம்
பன்னெடுநாட் செல்லும் பணிகொண்டு''

(போற்றிப்பஃறொடை)

என்றதனாலும் காண்க.

* *'பூதனாசரீரம் போனால்' என்ற சித்தியார் திருப்பாடலின் கருத்தினை நினைத்து இவ்வாறு எழுதியுள்ளார்.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்ஙனம் தண்டிக்கப்படுதலினாற் போந்த பயன் பாவமனைத்துந் தீரப்பெற்றுச் சுகமடைதலாம்.

செம்புறு களிம்பென வநாதிமல மூழ்கியிருள்
சேருமலர் விழியென்னவே
தெளிவற்ற கேவலத் தசைவற் றிருந்துமல
சேட்டையாற் குழவிகுருடர்
தம்பிணியி னாலுற்ற பால்கோலை நோக்கவவை
தமையளிப் பாரென்ன நான்
சார்கன்ம மாயையை விரும்ப நீ தந்திடச்
சகலனாய்ச் சுழல்கறங்கு
பம்பரம தென்ன நீள் பிறவிச் சுழிக்குளே
பட்டுழல் பெரும்பாவியேன்
பாழான மலமற்று வினையற்று மாயையின்
பற்றுவிட் டுனையறிந்துன்
அம்பொனடி நீழல்சேர்ந் தானந்த முண்டுநா
னதுவா யிருப்பதென்றோ
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (4)

இ-ள்

செம்பு உறு களிம்பு என	-	செம்பு என்னும் உலோகத்திலே பொருந்திய களிம்பானது அவ்வுலோகம் உள்ளபோதே அதில் பொருந்தியுள்ளது போல,
அநாதி மலம் மூழ்கி	-	அநாதிக் காலத்திலேயே ஆணவமலத்துள்ளே அழுந்திக்கிடந்து,
இருள் சேரும் அலர்விழி என்ன	-	இருட்டிலே அகப்பட்ட விழித்த கண்ணானது ஒன்றையும் அறியாமல் கிடத்தல் போல,
தெளிவு அற்ற கேவலத்து	-	விளக்கமில்லாத கேவல அவத்தையிலே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசைவு அற்று இருந்து	-	அறிவு இச்சை செயல்கள் ஒன்றும் செயற்படாமல் சும்மா இருந்து,
குழவி குருடர் தம் பிணியினால்	-	குழந்தைகளும் குருடர்களும் தமக்குள்ள பசி குருடு என்னும் நோய்களினால்,
பால் கோலை நோக்க	-	முறையே குழந்தை பாலையும் குருடர் கோலினையும் விரும்ப,
அவை தமை அளிப்பார் என்ன	-	முறையே அவர்கட்கு அப்பாலையும் கோலையும் கொடுத்து உதவி செய்கின்றவர்களைப் போல,
மல சேட்டையால்	-	(உயிர்களின் அறிவு இச்சை செயல்களைத் தடைசெய்யும்) ஆணவமலத்தின் செய்கையால்,
நான் சார் கன்மம் மாயையை விரும்ப	-	யான் (அத்தடை நீங்கும் பொருட்டாகச்) சார்தற்குரிய கன்ம மலத்தையும் மாயா மலத்தையும் விரும்ப,
நீ தந்திட	-	தேவரீர் அவ்விருப்பமாகிய மூல கன்மத்துக்குத் தக்க மாயேயமாகிய கருவிகளையும் அவற்றால் காமிய கன்மத்தையும் கொடுத்ததனால்,
சகல்னாய்	-	சகலாவத்தையைப் பொருந்தியவனாகி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுழல் கறங்கு பம்பரம் அது என்ன	-	சுழலுகின்ற காற்றாடியையும் பம்பரத்தையும் போல,
நீள் பிறவி சுழிக்குளே	-	நீண்ட பிறவியாகிய கடல் வெள்ளத்தில் தோன்றும் சுழியில்,
பட்டு உழல் பெரும் பாவியேன்	-	அகப்பட்டு அலமரும் பெரும் பாவமுடையேனாகியயான்,
பாழ் ஆன மலம் அற்று	-	எல்லாக் கேடுகளுக்கும் காரணமாயுள்ள ஆணவமலம் நீங்கப்பெற்று,
வினை அற்று	-	இரு வினைகளும் நீங்கப்பெற்று,
மாயையின் பற்றுவிட்டு	-	மாயைகளின் தொடர்பும் நீங்கப்பெற்று,
உனை அறிந்து	-	இவ்வாறு மும்மலங்களையும் அறுவித்த முதல்வியாகிய உன்னை உணர்ந்து,
உன் அம்பொன் அடிநீழல்	-	உன்னுடைய அழகிய பொன் போன்ற (பிறவித்துயர வெப்பத்தை மாற்றும்) திருவடியாகிய நிழலை,
சேர்ந்து	-	அடைந்து,
ஆனந்தம் உண்டு	-	பேரானந்தமாகிய அமுதத்தை நுகர்ந்து,
நான் அதுவாய் இருப்பது என்றோ	-	அடியேன் அந்த ஆனந்த மயமாகியே நிலைபெற்று வாழ்வது எக்காலமோ,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அருள் ஞான வாரியே	-	திருவருள் ஞானமாகிய பெரிய கடலாய் உள்ளவளே,
ராசை மேவிய செல்வ	-	இராசவில்லிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் செல்வமாகிய,
அகிலாண்டம் என்னும் அரசே	-	ஆகிலாண்ட நாயகி என்னும் திருநாமமுடைய அரசியே, (சொல்லியருளுக) என்றவாறு.

செம்பிற் களிம்பு போலவும் நெல்லிற்கு உமி போலவும் அநாதியே உயிருக்கு அறியாமையுளதாம். 'நெல்லிற் குமியு நிகழ்செம்பி னிற்களிம்பும், சொல்லிற் புதிதன்று தொன்மையே - வல்லி, மலகன்ம மன்றுளவாம் வள்ளலாற் பொன்வாள், அலர் சோகம் செய்கமலத் தாம்' (சிவஞானபோதம், உதாரணவெண்பா) எனவும், "அல்லன்மிக வுயிர்க்கிவைதா னணைத்த தீசன் அருவினைக ளருந்து தற்கோ வினையோ வன்றிச், சொல்லிவரு மாயையோ வணுவை முந்தச் சூழ்ந்ததெனு முரைமுதலோர் தொடக்கி லார்பால், ஒல்லைவரு மெனினுளதா முயிருண் டாவே யுள துமல மலமுளதா வொழிந்த வெல்லாம், நெல்லின்வரு தவிடுமி போல் அநாதியாக நிறுத்திடுவரி துசைவ நிகழ்த்து மாறே" (சிவப்பிரகாசம்) எனவும் வருவனவற்றாற் காண்க, ஈண்டு இருவினையென்றது, முற்பிறவிகளின் ஈட்டப்பட்டு மாயையிற் கட்டுப்பட்டுக் கிடந்த புண்ணிய பாவங்களை என்க. புண்ணிய பாவங்கள் என்று கூறினும் அவற்றின் பயன்களாகிய இன்பமும் துன்பமும் எனக் கொள்க. உமி மாயைக்கும் களிம்பு ஆணவ மலத்துக்கும் உவமையாகக் கூறப்பட்டது. உமாபதி தேவ நாயனார், ஆணவத்துக்குத் தவிடும் கன்மத்துக்கு முளையும் காட்டி, "நெல்லின்முளை தவிடுமிபோல் அநாதியாக நிறுத்திடுவர்" என்றருளினார். திருமூல தேவ நாயனாரும், "ஆணவ மாயையுங் கன்மமு மாமலம், காண முளையுந் தவிடுமி யான்மாவும், தானு வொவ்வாமலே தண்டுல மாய்நிற்கும், பேணுவாய் மற்றுநின் பாசம் பிரித்தே" (2192) என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இனி விருப்பு வெறுப்பென்னும் மூலகன்மம் தொழிற்பட்டன்றிப் பயன்தராது. மூலகன்மம் விருப்பு வெறுப்பு என்பதனை ''வேண்டுதல் வேண்டாமையிலான்'' என்னும் திருக்குறளும் வலியுறுத்தும். எவ்வாறெனில்? இறைவனுக்கு விருப்பு வெறுப்பு இல்லாமை கூறவே அவ்விருப்பு வெறுப்பு ஆன்மாவிற்கு உண்டு என்பது குறிப்பாற் பெறப்படும். இவ்விருப்பு வெறுப்பையே ஸ்ரீ கச்சியப்ப முனிவர் ''இரண்டெனும் பழைய வினையும்'' எனத் திருவானைக்காப் புராணத்தில் கூறியருளினர். பட்டினத்தடிகள், ''இருவாதனை யற்றிறந்தான் பெருமை'' என்றவிடத்து 'இருவாதனை' என்றதும் இக்கருத்துப் பற்றியதே. கன்ம மலத்துக்கு முன் விருப்பு வெறுப்பு உள என்பதனை இப்பாடலின்கண் சுவாமிகள் அருளிச் செய்த அருமைப்பாட்டை உணர்க.

இனி, கேவலத்தில் அறிவு தொழிற்பாடின்றிக் கிடந்த ஆன்மாவிற்குக் குருடனுக்குக் கோல் கொடுப்பதுபோல் இறைவன் சூக்கும தேகத்தைக் கருணையினாற் கொடுப்பன். அச்சூக்கும தேகத்தை இறைவன் தருதல் வினை காரணமாக அன்று; அறியாமையுட்பட்டு ஆன்மா வருந்தும் காரணத்தால் அது தரப்பட்ட தாம். அச்சூக்குமதேகம் முத்தியடையும்வரை எத்துணைப் பிறவிகளை எடுப்பினும் ஒன்றாகவே இருந்து முத்தியடையின் நீங்கும். அச்சூக்குமதேகம் எல்லா உயிர்க்கும் ஒரு தன்மையாகவே இருக்கும். இருப்பினும், முன்பொருந்தி நின்ற அறியாமை பல வேறு வகைப்படும். ஆதலின், அவ்வறியாமைக் கேற்ப அச்சூக்கும தேகத்தினின்று தூலவுடம்பும், அவ்வுடம்பால் வினையும் மாறி மாறி வரும். ஆதலால் வினை உடல் எனும் இரண்டிற்கும் மூலமாகியது சூக்குமதேகம். வித்து முந்தியோ மரம் முந்தியோ என ஒன்றுக்கொன்று காரண காரியமாக உள்ளது. ஆயினும், இறைவன் முதலாவதாக மரத்தைத்தான் உற்பத்தி செய்திருத்தல் வேண்டும் என்க.

முன்னைமல மென்னுமொரு பேய்பிடித் திருவினை
முதிர்ந்தவெறி யரவுசுற்றி
முடியாத பிறவிக் கடற்குள்வீழ்ந் தாசையென
மூண்டசுழி வந்தமிழ்த்த
மின்னனைய மாதரெனு மகரமீ னொருபுறம்
விழுங்கவைம் பொறிகளான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விறல்கரவ மைந்தும்வந் தெங்கணு மிழுக்கநான்
வீணிலே நைவதானேன்
பொன்னனைய நின்னடித் தாமரைத் தலமலாற்
புகலிடம் பிறிது காணேன்
பொய்யனே னாகிலுங் கைவிடா தாளுவாய்
புவனங்க ளியாவுமீன்ற
அன்னையே பகிரண்ட முகடெலாங் கரைபுரண்
டப்புறமு மலை ததும்பும்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (5)

இ - ள்

முன்னை மலம் என்னும் ஒரு பேய் பிடித்து	-	அநாதியாகவுள்ள ஆணவமலம் என்று சொல்லப்படும் ஒப்பற்ற பேயினால் பீடிக்கப்பட்டு,
இருவினை	-	நல்வினை தீவினை என்னும் இருவகைப்பட்ட கன்மமலம் என்று சொல்லப்படும்.
முதிர்ந்த வெறி அரவு சுற்றி	-	முற்றிய மயக்கத்தைச் செய்யும் விடப் பாம்பினால் கட்டப்பட்டு,
முடியாத பிறவிக் கடற்குள் வீழ்ந்து	-	ஒழிவில்லாத பிறப்பாகிய கடலினுள்ளே வீழ்ந்து,
ஆசை என மூண்ட சுழி	-	அவா எனத் தோன்றிய நீர்ச்சுழியானது,
வந்து அமிழ்த்த	-	என் பால் சுழன்றுவந்து தன்னுள்ளே என்னை அமிழ்த்தி விட,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மின் அனைய மாதர் எனும்	-	மின்னலைப் போலும் மகளிர் என்று சொல்லப்படும்,
மகரமீன் ஒருபுறம் விழுங்க	-	பெரிய மீனானது ஒரு பக்கத்திலே விழுங்க,
ஐம்பொறிகள் ஆன	-	மெய் வாய் கண் மூக்குச் செவியென்னும் இந்திரியங்களாகிய,
விறல் கரவம் ஐந்தும் வந்து	-	வலிமை பொருந்தும் முதலைகள் ஐந்தும் என்பால் தொடர்ந்து வந்து,
எங்கணும் இழுக்க	-	தாம் செல்லும் இடங்களிலெல்லாம் இழுத்துச்செல்ல,
நான் வீணிலே நைவது ஆனேன்	-	அடியேன் யாதொரு பயனுமின்றித் துன்பத்தால் வருந்தி நின்றேன்,
நின்	-	உனது
பொன் அனைய அடி தாமரை தலம் அலால்	-	பொன்போலும் அருமையான திருவடித் தாமரைகள் அல்லாமல்,
புகல் இடம்	-	நான் அடைக்கலமாகச் சேர்வதற்குரிய இடம்,
பிறிது காணேன்	-	வேறொன்றையும் காணகில்லேன்,
பொய்யனேன் ஆகிலும்	-	யான் நிலைபெற்ற உணர்ச்சி சிறிதும் இல்லாதவனாயினும்,
கைவிடாது ஆளுவாய்	-	என்னை விட்டுவிடாமல் ஆட் கொண்டருளுவாயாக,
புவனங்கள் யாவும் ஈன்ற அன்னையே	-	உலகங்கள் எல்லாவற்றையும் பெற்றெடுத்த தாயே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகிர் அண்ட முகடு எலாம்	-	வெளியண்டங்களின் உச்சி முழுவதிலும்,
கரைபுரண்டு	-	எல்லையினைக் கடந்து,
அப்புறமும் அலை ததும்பும்	-	அவற்றினுக்கப்பாலும் அலைகள் ததும்பி வழியும்,
அருள் ஞான வாரியே	-	திருவருள் ஞானமாகிய பெருங்கடலாயுள்ளவளே,
ராசை மேவிய செல்வ	-	இராச வில்லிபுரமாகிய தலத்தில் எழுந்தருளியுள்ள செல்வமாகிய,
அகிலாண்டம் என்னும் அரசே	-	அகிலாண்ட நாயகி என்னும் பெயரையுடைய அரசியே என்றவாறு.

இப்பாடலினுள் மலம், இருவினை, பிறவி, ஆசை, மாதர், ஐம்பொறிகள் என்னும் இவைகளை முறையே; பேய், அரவு, கடல், (நீர்ச்) சுழி, மகரமீன், கரவம் (கரா) என உருவகம் செய்தருளினர்: இது முற்றுருவகம்.

இதனை,

''தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெவ்வத்
தடந்திரையால் எற்றுண்டு பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயார் என்னுங் காலாற்
கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்(டு)
இனியென்னே உய்யுமா றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
முனைவனே முதலந்தம் இல்லா மல்லற்
கரைகாட்டி ஆட்கொண்டாய் மூர்க்க னேற்கே.''

என்னும் (திருவாசகம் - திருச்சதகம் - 27) திருவாக்குடன் ஒட்டிக் காண்க.

மகளிருடைய அழகிய அலங்கார அவயவங்கள் அனைத்தும் மாயா சாலம் எனக் கருதி விட்டுநீங்குதல் அறிவுடைமையாகும். மகளிர் சிற்றின்பம் முத்திக்குத் தடையானது. 'பாழான சிற்றிடை மடந்தையர்கள் சிற்றின்பம் மாயா விலாச மோக வாரிதியில் ஆழ்த்திடும்' என்றமையும் காண்க.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''காதென்று மூக்கென்று கண்ணென்று
காட்டியென் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை
தன்னை மறலிவிட்ட
தூதென்றெண் ணாமற் சுகமென்று
நாடுமித் துர்ப்புத்தியை
ஏதென் றெடுத்துரைப் பேனிறை
வாகச்சி யேகம்பனே''.
(பட்டினத்துப்பிள்ளையார்).

ஆசையை நீர்ச்சுழியாகக் கூறியது சுழியினுள் அகப்பட்ட ஒரு பொருள் தப்பி வெளிவருதல் கூடாதாகலின்.

''ஆசையறுமின்கள் ஆசை யறுமின்கள்
ஈசேனா டாயினும் ஆசை யறுமின்கள்
ஆசை படப்பட ஆய்வருந் துன்பங்கள்
ஆசை விடவிட ஆனந்த மாமே'' (திருமந். 2615)

*நிராசைக்குணம் ஒன்றே ஐம்பொறிகளால் பற்றப்படுகின்ற விடயங்கள் யாவும் அற்று ஒழிகைக்குக் காரணமாம் என்க.

இசையொத்த பண்களுஞ் சொல்லோடு பொருள்
மிருளினொடு வொளியு நீண்ட (களு)
இன்பமொடு துன்பமு நரகொடு சுவர்க்கமு
மெண்ணுதற் கரியவான
வசைபெற்ற யோநிபே தங்களும் மவைதம்மின்
மருவுமுயிர் யாவுமோங்கு
மறைநாலு வர்க்கமு மற்றுமுள கலைகளு
மலைகடலெ லாமுமலையும்
திசையெட்டு மிரவியொடு சோமனுஞ் சம்யத்
திரட்சிகளு மொருவராலும்
தேடரிய புவனகோ டிகளுமதில் வாழ்கின்ற
தெய்வங்கள் பலவும்யாவும்
அசைவற்ற பரவெளிக் குள்ளே யிருக்குமென்
றறிவித் தெனைக்கலந்த
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (6)

*நிராசைக்குணம் - வைராக்கியம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இ - ள்

இசை ஒத்த பண்களும்	-	இசையினோடு ஒத்து நிற்கும் பண்களும்,
சொல்லோடு பொருள்களும்	-	சொற்களோடு அவற்றால் உணர்த்தப்படும் பொருள்களும்,
இருளினொடு ஒளியும்	-	இருளும் அதனோடு மாறுபட்டுள்ள ஒளியும்,
நீண்ட இன்பமொடு துன்பமும்	-	மிக்க இன்பமும் அதனோடு மாறுபட்ட துன்பமும்,
நரகொடு சுவர்க்கமும்	-	துன்பத்தை அனுபவிக்கும் நரகலோகமும் இன்பத்தை அனுபவிக்கும் சுவர்க்கலோகமும்,
எண்ணுதற்கரிய ஆன	-	அளவிட்டறிதற்கு அருமையையுடைய,
வசைபெற்ற யோனி பேதங்களும்	-	இழிவையுடைய பிறப்புக்களின் பேதங்களும்,
அவை தம்மின் மருவும் உயிர் யாவும்	-	அப்பிறவி பேதங்களிலே பொருந்தும் உயிர்கள் யாவும்,
ஓங்கும் நாலு மறை வர்க்கமும்	-	உயர்ந்த நான்கு வேதங்களும் அவற்றின் பகுதிகளும்,
மற்றும் உள கலைகளும்	-	அவ் வேதப் பகுதிகளே தோன்றி வேறு வேறாகவுள்ள பல கலைகளும்,
மலை கடல் எலாமும்	-	மலைகளும் கடல்களும் ஆகிய எல்லாப் பொருள்களும்,
மலையும் திசை எட்டும்	-	மயங்குகின்ற எட்டுத் திசைகளும்,
இரவியொடு சோமனும்	-	சூரியனும் சந்திரனும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சமயத் திரட்சிகளும்	சமயங்களின் கூட்டமும்,
ஒருவராலும் தேட அரிய	எவ்வளவு ஆற்றல் படைத்தோர்களாலும் தேடிக் காண இயலாத,
புவன கோடிகளும்	எண்ணில்லாத புவனங்களும்,
அதில் வாழ்கின்ற தெய்வங்கள் பலவும்	அவ்வப் புவனங்களிலே வாழ்கின்ற தெய்வங்கள் பலவும்,
யாவும்	இவ்வாறு விரித்துச் சொல்லப்பட்ட எல்லாமும்,
அசைவு அற்ற பரவெளிக்குள்ளே	அசைதலில்லாத மேலான சிதாகாசத்தின் ஒரு கூற்றினுள்ளே,
இருக்கும் என்று அறிவித்து,	அமைவனவாம் என்று உணர்த்தி,
எனை கலந்த	அடியேனை அந்தப் பரஞான வெளியிலே கலக்கும்படி செய்தருளிய,
அருள் ஞான வாரியே	திருவருள் ஞானமாகிய பெருங்கடலாய் உள்ளவளே,
ராசை மேவிய செல்வ	இராசவில்லிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் செல்வமாகிய,
அகிலாண்டம் என்னும் அரசே	அகிலாண்டநாயகி என்னும் பெயரினையுடைய அரசியே என்றவாறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பண் இசையோடு ஒத்து நில்லாதபோது பயனின்றாம். சொற்கள் பொருளுணர்த்தாதவழியும் சிறிதும் பயனில்லை என்க. பரவெளியாகிய சிதாகாசத்தில் எண்ணிக்கையிலடங்காத அண்டங்கள் உள்ளன. இதனை, 'பாராதியண்டங்க ளத்தனையும் வைகின்ற பரவெளி' என்பர் தாயுமானசுவாமிகள். அண்டங்கள்: பூதாண்டம், தேவாண்டம், மகாண்டம், அகிலாண்டம், சுவாண்டம், பகிரண்டம், பத்மாண்டம் முதலியன என்பர். கோடானுகோடி அண்டங்களைத் தன்னகத்தே ஒரு கூற்றினுள் அடக்கி வைத்துக் கொண்டிருப்பினும் அவை நிலையுள்ளனவல்ல என்றும், அவை தத்துவங்களின் காரியமாய்ச் சடம் என்றும் உண்மையை உணர்த்தி என்க. புவனங்கள் இருநூற்றிருபத்து நான்கு. அவை நிவிர்த்திகலை முதலாகச் சாந்தியாதீத கலை யீறாகவுள்ளன. அவ்வப் புவனங்களுக்கு உரிய புவனபதிகளுமுளர். இவற்றை விரிந்த நூல்களிற் கண்டு கொள்க. எனைக் கலந்த - என்னைக் கலப்பித்த.

நீயுள்ள தென்றன்று நானுமுள னன்றுமுத
 னீங்காம லென்னிடத்தின்
நேசம்வைத் தேநீ யிருக்கநான் மலமாகி
 நின்றதே துடலெனக்கங்
கேயுமுறை யெங்ஙனே வினைகடரு மெனிலவைக
 ளேறிடா தநுவிலாமல்
எட்டாத கேவல மிருப்பமே லவைகன்ம
 மாகாவ விச்சைகண்டு
காயம தளிப்பதெனி லின்புதுன் புறமுன்பு
 கன்மமே திதனையருள்வாய்
ககனமுக டுங்கடந் தளவில்புவ னங்களுங்
 கரைபுரண் டெங்குமோங்க
ஆயுமறை காணா தகண்டமாய் நின்றதிரு
 வக்கினீ சுரர்மருவுநீள்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
 வகிலாண்ட மென்னுமரசே. (7)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இ - ள்

நீ உள்ளது என்று	-	முழுமுதல்வியாகிய நீ எக்காலத்து உள்ளனை,
அன்று நானும் உளன்	-	அன்று முதலாகவே அடியேனும் உள்ளேன்,
அன்று முதல்	-	நீயும் நானும் உள்ள அந்தக்காலம் முதலாகவே,
நீ என்னிடத்தில் நீங்காமல் நேசம் வைத்திருக்க	-	நீ என்னிடத்திலேயும் விட்டுப் பிரியாமல் கருணை வைத்திருக்கவும்,
நான் மலம் ஆகி நின்றது ஏது	-	அடியேன் ஆணவ மலத்தினுள் அழுந்திக் கேவலநிலையில் கிடந்தமைக்குக் காரணந்தான் யாது,
அங்கு எனக்கு உடல் ஏயும் முறை எங்ஙனே	-	அந்த மல கேவலத்தில் அடியேனுக்கு உடல் வந்து பொருந்தும் முறை எவ்வாறாம்,
வினைகள் தரும் எனில்	-	கன்மங்களே உடம்பைத் தந்தது என்றால்,
அவைகள் தனு இலாமல் ஏறிடா	-	அக்கன்மங்களும் உடம்பு இல்லாமல் உண்டாகக் காரணம் இல்லை,
எட்டாத கேவலம் இருப்ப	-	உணர்ச்சிக்கு எட்டாத கேவல நிலையில் யான் இருத்தலால்,
மேல் ஒரு கன்மம் ஏயாது	-	அந்தக் கேவல நிலையின்கண் யாதொரு கன்மமும் பொருந்தாது;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவிச்சை கண்டு	-	ஆணவமலத்தில் அழுந்தி அறிவு விளக்கமின்றி அறியாமையோடு கூடிக் கிடந்ததை அறிந்து,
காயம் அளிப்பது எனில்	-	(அவ்வறியாமை நீங்கும் பொருட்டு) உடம்பைத் தருவதாயின்,
இன்பு துன்பு உற	-	(உடம்பிலே) இன்ப துன்பங்களை அனுபவித்தற்கு,
முன்பு கன்மம் ஏது	-	முன்னே கன்மம் எப்படி வந்தது,
இதனை அருள்வாய்	-	இந்த ஐயத்தை நீங்கும்படி எனக்குத் தெரிவித்தருள்வாயாக,
ககன முகடும் கடந்து	-	ஆகாயத்தின் உச்சியையும் தாண்டிச்சென்று,
அளவு இல் புவனங்களும்	-	கணக்கற்ற புவனங்களையும்,
கரை புரண்டு எங்கும் ஓங்கி	-	எல்லை கடந்து எவ்வெவ்விடங்களினும் மேம்பட்டு,
ஆயும் மறை காணாது	-	ஆராயும் வேதங்களாலும் காணுதற்கு முடியாததாய்,
அகண்டமாய் நின்ற	-	எங்கும் பரவிநின்ற,
திரு அக்கினீசுரர் மருவும்	-	முத்தித் திருவினைத்தரும் அக்கினீசுரர் என்னும் பரமசிவனைப் பொருந்தி நிற்கும்,
நீள் அருள் ஞானவாரியே	-	பெரிய திருவருள் ஞானமாகிய பெருங் கடலாயுள்ளவளே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராசை மேவிய செல்வ - இராச வில்லிபுரம் என்னும் தலத்தில் வீற்றிருந்தருளும் செல்வமாகிய,

அகிலாண்டம் என்னும் அரசே - அகிலாண்ட நாயகி என்னும் திருநாமத்தையுடைய அரசியே எ-று.

பதியும் பசுவும் அனாதி நித்தியமாதலின், 'நீயுள்ள தென்றன்று நானுமுளன்' என்றருளினர்.

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசம் நிலாவே,'' (திருமந் - 115)

எனவும்,

'எஞ்ஞான் றுளையுள மஞ்ஞான் றியாமே'
(பண்டாரமும்மணிக்கோவை)

எனவும்,

'என்று நீ யன்றுநா னுன்னடிமை யல்லவோ'
(தாயுமானவர் பாடல்)

எனவும் வருவனவற்றால் அறிக. இதனால், பரமான்மாவே ஆன்மா வென்றும், ஆன்மாவே பரமான்மா என்றும் கூறுவார் மதம் மறுக்கப்பட்டமை காண்க.

இனி, இதனை ஒருவாறு வினா விடைகளால் விளக்குவாம்.

வினா:

அறியாமையாகிய குற்றமும், வினையும், காயமும் அடியேனுக்கு வந்தவாறு ஏது?

விடை:

நீ உனது முந்திய சென்மத்தினால் தேடிக் கொண்ட மலங்கள் கூட்டி வைத்தன.

வினா:

சேட்டையற்ற சடமாகிய மலங்கள் எங்ஙனம் கூட்டி வைக்கும்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடை:

நீ அறிவுள்ளவனாகையால் உன்னுடன் அம்மலங்கள் கூடுகையில் அவை சேட்டைப்படும்.

வினா:

கடபடங்களாயுள்ள சால் (பாத்திரம்) குடம் புடவை சீலை முதலியன அடியேனுடன் கூடின அவதரத்துச் சேட்டைப்படக் கண்டேனில்லையே?

விடை:

மலங்கள் கடபடாதிகளைப் போலன்று. விடத்தையுடைய வசநாவி முதலாயுள்ள நஞ்சுகள் சடமாயினும், அறிவாயுள்ள ஆன்மாக்கள் அவற்றைப் புசித்த அவதரத்து அறிவை அழித்து அவற்றின் குணம் மேலிட்டு மயக்கினாற்போல, அந்த மலங்கள் சடமாயினும் அறிவுள்ள உன்னுடன் சம்பந்தமான அவதரத்து அவைகட்குச் சேட்டையுண்டாம்.

வினா:

மலங்களுக்கு உவமையாகக் கொண்ட நஞ்சுகள் மலங்களைப் போல் பல குணங்களைச் செய்யக் கண்டதில்லை. அன்றியும், மலங்கள் சடமானபடியால் அவை தாமே அடியேனை வந்து பொருந்தா. அடியேனோ அவற்றை வேண்டுமென உண்டாக்கிக் கொள்ளேன். முதல்வன் நின்மலன் ஆகையால் அஞ்ஞானமாகிய மலங்களை அடியேனுக்கு உண்டாக்கப் போவதில்லை. மலங்களால் விளைத்தவாறு எங்ஙனம்?

விடை:

அம்மலங்கள் ஆன்மாவாகிய நீ உள்ளவன்றே சுபாவமாக உன்னிடத்தில் உளவாம்.

வினா:

பாலில் வெளுப்பும், கருமையிற்கறுப்பும் இயல்பாயுள்ளன ஆகலின், சுபாவத்திற்கு ஒரு காலத்தும் நீக்கம் இல்லையே?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடை:

*நெல்லின்கண் உளதாகிய முளைத்தற்சத்தி முளையைத் தோற்றுவிக்குமாறுபோல, கன்மமலம் உன்னுடைய சுகதுக்கங்களை முதற்காரணமாய் நின்று தோற்றுவிக்கும். 'முளைத்தற்கு அனுகூலம் செய்து உடன் நிற்கும் தவிடுபோல' மாயாமலம் அச்சுகதுக்கங்கள் ஆண்டுத் தோற்றுதற்குத் துணைக்காரணமாய்த் தன் காரியமாகிய தனுகரணம் முதலியவற்றையும் உயிரையும் இயைவித்து நிற்கும். அம்முளை ஆண்டுத் தோன்றுதற்கு நிமித்தகாரணமாகிய உமிபோல ஆணவமலம் அத்தோற்றத்திற்கு நிமித்த காரணமாய் அவற்றை முறுகுவித்துநின்று அச்சுக துக்கங்களை உயிர் நுகருமாறு நிலைபெறச் செய்யும். இவற்றை இங்ஙனம் கூட்டிவைப்பான் முதல்வன் என அறிக.

உடலத்தி லின்றெனக் கொழியாத விச்சை தா
நுற்றதே துன்றனாலே
உற்றதே னீதநு வளித்திடும் போதெலா
முறவேண்டு மென்றனியல்பேல்
கடலொத்த பிறவிதனி லெந்நாளு மவ்விச்சை
கட்டுற்று நிற்கவேண்டும்
கடியமல சத்திசற் றகலவரு மெனிலவை
கழித்ததார் நீகழிக்கில்
கெடலுற்ற வெல்லா வுயிர்க்குநீக் குவையாங்
கெடுத்தாலு மம்மலந்தான்
கெட்டால் முனைவந்து கிட்டிவழி படுவதென்
கேடிலா விவையருளுவாய்
அடலுற்ற திரிபுர மடங்கலு மெரித்ததிரு
வக்கினீ சுரரைமருவும்
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (8)

** சித்தியாரில் உள்ள "மும்மலம் நெல்லினுக்கு" எனத் தொடங்கும் பாடலுக்குச் சுவாமிகள் அருளிய விசேட உரையைத் தழுவியது.*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இ - ள்:

அடல் உற்ற திரிபுரம் அடங்கலும் எரித்த	-	உலகங்களைத் துன்புறுத்தி நலியச்செய்த திரிகின்ற புரங்கள் முழுவதையும் சிரித்தெரித்துப் பொடி செய்தருளிய,
திரு அக்கினீசுரரை மருவும்	-	அழகிய அக்கினீசுரப் பெருமானை மணஞ்செய்து அருளியுள்ள,
அருள் ஞான வாரியே	-	திருவருள் ஞானமாகிய பெருங்கடலாக உள்ளவளே,
ராசை மேவிய செல்வ	-	இராசவில்லி புரத்தில் வீற்றிருந்தருளும் செல்வமாகிய,
அகிலாண்டம் என்னும் அரசே	-	அகிலாண்டநாயகி என்னும் திருநாமத்தையுடைய அரசியே,
இன்று	-	இந்தச் சகலாவத்தையில்,
எனக்கு	-	அடியேனுக்கு,
உடலத்தில் ஒழியாத இச்சைதான் உற்றது ஏது	-	உடம்பிலே நீங்காத விருப்பம் உண்டானது எதனால்,
உன்றனாலே உற்றதேல்	-	உன்னால் அவ்விச்சை எனக்கு உள்ளதாயின்,
நீ தனு அளித்திடும் போதெலாம் உறல் வேண்டும்	-	நீ எனக்கு உடம்பைத்தரும் காலங்களிலெல்லாம் அவ்விருப்பம் எனக்கு உண்டாதல் வேண்டும்.
என்றன் இயல்பேல்	-	(அஃதன்றி) அஃது என்னுடைய இயல்பு ஆயின்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கடல் ஒத்த பிறவிதனில் -	கடலிலுண்டாகும் அலைகளைப் போன்ற அளவில்லாத பிறப்புக்களில்,
எ நாளும் அ இச்சை கட்டுற்று நிற்றல் வேண்டும் -	எந்தக் காலத்திலும் அவ்விருப்பம் பிணிப்புற்று நிற்க வேண்டும், (அதுவல்லாமல்),
கடிய மலசத்தி சற்று அகல வரும் என்னில் -	வலிய ஆணவமலத்தின் ஆற்றல் சிறிது நீங்கிய வழி அவ்விருப்பம் உண்டாகும் என்று கூறினால்,
அவை கழித்தது ஆர் -	அம்மல சத்திகளை நீக்கியது யாவர்,
நீ கழிக்கில் -	நீ அம்மல சத்திகளைப் போக்கினையாயின்,
கெடல் உற்ற எல்லா உயிர்க்கும் நீக்கிடுவை -	(அம்மல சத்திகளால்) கேடுற்ற எல்லா உயிர்களுக்கும் போக்கி யருளுவாயன்றே,
யான் கெடுத்தாலும் -	அடியேன் அவற்றைப் போக்கிக் கொள்வேனாயினும்,
அம்மலம் தான் கெட்டாலும் -	அம்மல சத்திகள் தாமாகவே நீங்கினாலும்,
உனை நான் கிட்டி வந்து வழிபடுவது என் -	உன்னை அடியேன் அணுகி வந்து வழிபாடு செய்தலினால் உண்டாகும் பயன் யாது?,
கேடு இலாய் -	அழியாதவளே,
இவை அருளுவாய் -	இந்த ஐயங்களையெல்லாம் அடியேனுக்குப் போக்கி யருள்வாயாக என்றவாறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திரிபுரம் அடங்கலும் எரித்தமை :'திரிபுரமெரியுண நகை செய்த படைமரு தழலெழ மழுவல பகவன்' (இடை மருது - ஞான- தே) 'அன்றின ரரியென வருபவ ரரிதினின், ஒன்றிய திரிபுர மொருநொடி யினிலெரி, சென்றுகொள் வகைசிறு முறுவல்கொ டொளிபெற, நின்றவர்' (திருவீழிமிழலை - ஞா-தே).

ஆன்மா ஆணவமலத்தில் அழுந்தி அறிவு இச்சை செயல்கள் விளங்காமல் நின்ற அவதரம் கேவலாவத்தையாகும். பின்பு ஆன்மா கருவிகரணங்களுடன் கூடி அறிவு விளங்கப்பெறும் நிலை சகலாவத்தை.

அநாதியில் ஆன்மாக்கள் ஆணவமலத்தில் அழுந்திக் கிடந்தன. ஆணவமலம் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுத்தது. இதனை உணர்ந்த இறைவர் ஆன்மாக்களுக்கு உள்ள விருப்பத்துக்குத் தக்கவாறு மாயா கருவிகளைக் கொடுத்து அதன் மூலமாகக் கன்மங்களைப் புசிக்கச் செய்தார் என்க.

ஆணவமலம் ஆன்மாக்களுக்கு அநாதி செயற்கையாம்; அநாதிசையோகம் என்றும் கூறப்படும். குழந்தைக்குப் பாலில் விருப்பம். அந்த விருப்பம் தாய் கொடுத்த விருப்பமோ? அல்லது குழந்தைக்கு உண்டாகிய விருப்பமோ? என்னில், தாய் கொடுத்த விருப்பமானால் அவள் பால் கொடுக்கும் போதெல்லாம் குழந்தை பாலைக் குடிக்கவேண்டும். குழந்தைக்கு உண்டாகிய விருப்பமானால் எப்போதும் பாலை மறுக்காமல் குடிக்க வேண்டும். மாந்தம் உண்டான காலத்தில் குழந்தை பாலை வெறுக்கக் காண்கிறோம். குழந்தைக்குப் பாலிலுள்ள விருப்பத்தைப் பசியே கொடுத்தது. பசி பாலில் விருப்பத்தைக் கொடுத்ததாயினும் அப்பசி பாலை அறிந்து எடுத்துக் கொடுப்பதில்லை. பாலும் அக்குழந்தை வாயில் வந்து புகுதல் இல்லை. இதனைத் தாய் அறிந்து இரக்கத்தால் பாலைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாலடையில் ஊற்றிக் குழந்தை வாயில் வைத்து ஊட்டுவாள். இவற்றுள், ஆன்மா குழந்தையைப் போன்றது. ஆணவமலம் பசியைப் போன்றது. கன்மமலம் பாலைப் போன்றது. இறைவன் தாயைப் போன்றவர். தனுகரண முதலியன பாலடையைப் போன்றன என்று உவமித்துக் கொள்ளுதல் வேண்டும்.

இனி, ஆணவமலமே ஆன்மாக்களுக்குக் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுத்தது. விருப்பத்தைக் கொடுத்த ஆணவமலமும் ஆன்மாக்கட்குக் கன்மத்தை அறிந்து எடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பின ஆன்மாவும் கன்மத்தை அறிந்து எடுத்துப் புசிக்க மாட்டாது. விரும்பப்பட்ட கன்மமும் ஆன்மாவை அறிந்து வந்து பொருந்தமாட்டாது. இதனை இறைவர் இரக்ககுணத்தால் அறிந்து ஆன்மாக்களின் விருப்பத்துக்கு ஏற்ற தனு (உடல்)வைக்கொடுத்து அத்தனுவினிடமாகக் கன்மத்தைக் கூட்டிப் புசிப்பிப்பார். ஆணவமலம் சடப்பொருள்; விருப்பு முதலியவற்றைக் கொடுக்குந்தன்மை அதற்கு எவ்வாறு உளதாயிற்று என்னில், நஞ்சு மயக்கும், தீச்சுடும், நீர் குளிரும்; இவற்றில் மயக்கம், வெம்மை, தண்மை முதலியன முறையே நஞ்சு தீ நீர் இவற்றின் குணமாக உள்ளன. அது போல ஆணவ மலத்துக்கும் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுக்கும் குணம் உண்டு என அறிக.

இனி, ஆன்மாவுக்கு உடம்பிலே உண்டாகிய விருப்பம் இறைவர் கொடுத்த விருப்பமோ? இறைவர் கொடுத்த விருப்பமாயின் அவர் உடல் கொடுத்த போதெல்லாம் பற்றிக் கொள்ள வேண்டும். அது அவ்வாறு பற்றாமையால் இறைவர் கொடுத்த விருப்பம் அன்று. ஆன்மாவுக்குள்ள விருப்பமாயின் உடலிலே இடைவிடாமல் பற்றிக் கொண்டிருக்க வேண்டும். அவ்வாறில்லாமையின் ஆன்மாவுக்குள்ள விருப்பமும் அன்று. மற்று எவ்வாறெனில், ஆணவ மலமே ஆன்மாவுக்கு உடம்பிலே விருப்பத்தைக் கொடுத்தது, விருப்பத்தைக் கொடுத்த ஆணவமலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆன்மாவுக்கு உடம்பை அறிந்து எடுத்துக் கொடுக்கமாட்டாது. விரும்பின ஆன்மாவும் உடம்பைத் தானே எடுத்துக் கொள்ள மாட்டாது. விரும்பப்பட்ட உடம்பும் ஆன்மாவை அறிந்து தானே வந்து பொருந்துமாறில்லை. இதனை இறைவர் இரக்கத்தினால் அறிந்து, ஆன்மா விரும்பின உடம்பைக் கொடுத்து, விரும்பின இடங்களிலே கொண்டு போய் வைத்து, விரும்பின கன்மங்களைக் கூட்டிப் புசிக்கச் செய்வார் என அறிக.

இதனை, ஓர் உதாரண முகமாக விளக்குவாம்: குருடனுக்குக் கோலிலே உண்டான இச்சை கோல் கொடுத்து இழுக்கின்றவன் இச்சையோ? அல்லது குருடனுக்குள்ள இச்சையோ? என்னில் கோல் கொடுத்து இழுப்பவன் இச்சையானால் அவன் கோல் கொடுத்த போதெல்லாம் பிடிக்க வேண்டும். அப்படி பிடியாத படியால் கோல் கொடுப்போன் இச்சையன்று. குருடனுக்குள்ள இச்சையானால் குருடன் கோலை இடைவிடாமல் பிடித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு அவன் பிடியாதபடியால் குருடன் இச்சையுமன்று. இதனால் அறிவது யாதென்னில் குருடே குருடனுக்குக் கோலில் இச்சையைக் கொடுத்தது. இச்சையைக் கொடுத்த குருடும் குருடனுக்குக் கோலை அறிந்து எடுத்துக் கொடுக்கமாட்டாது. இச்சித்த குருடனும் அந்தக் கோலைத் தானாகவே அறிந்து எடுத்துக் கொள்ளமாட்டான். இச்சிக்கப்பட்ட கோலும் குருடன் கையில் வந்து பொருந்தமாட்டாது. இதனைக் குருடனுக்கு உரிமையுடையோர் இரக்கத்தால் அறிந்து அவனுக்குக் கோலைக் கொடுத்து, குருடன் கொண்டுபோய் விடச் சொன்ன இடத்தில் கோலைப் பிடித்து இழுத்துக் கொண்டு போய் விடுவார்கள். குருடன், குருடு, கோல், கோல் இழுப்பவன், இடம் இவைகள் முறையே ஆன்மா, ஆணவம், உடம்பு, இறைவன், புவனங்கள் என அறிக. இதனை,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

''தணவிலா மலத்தின் குருடேனற் குடலந்த னொரு கோலெனக் கொடுத்துச் - சத்தமே யாதிவிடயமோ ரைந்தின் றன்வழி புசித்திடத் தந்து, குணவழி நடவார் குணவழி நடந்து குணத்தினைத் திருப்புவார் போலக் - கொடுவினை யொப்புச் சத்திநிபாதங் கூர்மல பாகமுங் குறித்தே, இணையிலா வின்ப வடிவமா முன்னோ டென்யையு மிரண்டற வைத்தாய் - ஏழையே னுன்றன் அடியருக் கடியா னென்னவும் பற்றிலே னரவின், அணைதுயி லெழுந்தே யருவிகண் பொழியுமரியரிக் குரைத்தகூத் துடையாய் - ஆவடு துறைசையம்பல வாணா வடியவர்க் கருளுமா நிதியே'' என்னும் ஸ்ரீ உலகுடைய நாயனார் திருவிருத்தத்தா னுணர்க. இந்நூல் நான்காவது செய்யுளினும் விளங்கக் கூறப்பட்டமை அறியலாம்.

மங்கையர்க ளின்பமே முத்தியென் றுங்கந்த
மடிவதே முத்தியென்றும்
வருமுக் குணங்கெடுதன் முத்திவினை மாய்வதே
வளர்முத்தி மூன்றுமலமும்
பங்கமுற லேமுத்தி யென்றுநித் தியதேகம்
பற்றுவது முத்தியென்றும்
பலவும் பகுத்தறிதன் முத்தியுயிர் கெடுவதே
படர்முத்தி சித்திகளெலாம்
தங்குவது முத்திபா டாணமொத் திடுவதே
தகுமுத்தி யென்றுமுயிர்கள்
தடுமாற மலமறுத் தகலாத திருவடித்
தாமரையென் முடியிலூன்றி
அங்கமுயிர் பொருளெலாங் கைக்கொண்டு நாயினேற்
காநந்த முத்திதந்த
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (9)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இ - ள்

மங்கையர்கள் இன்பமே முத்தி என்றும்	-	பெண்களிடமாக நுகரப்படும் சிற்றின்பமே உறுதி பயக்கும் முத்தியாம் என்றும்,
கந்தம் மடிவதே முத்தி என்றும்	-	ஐந்து கந்தங்களும் அழிவதே முத்தியாம் என்றும்,
வரும் முக்குணம் கெடுதல் முத்தி என்றும்	-	தன்னைப் பொருந்தும் மூன்று குணங்களும் அழிதலே முத்தியாம் என்று கூறியும்,
வினை மாய்வதே வளர்முத்தி என்றும்	-	இருவினைகளும் கெடுவதே நீடும் முத்தியாமென்றும்,
மூன்று மலமும் பங்கம் உறலே முத்தி என்றும்	-	ஆணவம் முதலிய மூன்று மலங்களும் கெட்டொழிவதே முத்தியென்றும்,
நித்திய தேகம் பற்றுவது முத்தி என்றும்	-	அழியாத உடம்பினைப் பெறுவதே முத்தியாமென்றும்,
பல்வும் பகுத்து அறிதல் முத்தி (என்றும்)	-	சடமாயுள்ள தத்துவங்களையும் உயிரையும் பிரித்தறிதலே முத்தியென்றும்,
உயிர் கெடுவதே படர் முத்தி (என்றும்)	-	சீவன் கெட்டுவிடுவதே அடைதற்குரிய முத்தியாம் என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சித்திகள் எலாம் தங்குவது முத்தி (என்றும்)	-	அணிமா முதலாகவுள்ள அட்டமாசித்திகள் யாவும் வந்து பொருந்துவதே முத்தியாம் என்றும்,
பாடாணம் ஒத்திடுவதே தகுமுத்தி என்றும்	-	கல்லையொத்து அறிவில்லாமல் கிடப்பதே மேலான முத்தியாம் என்றும்,
உயிர்கள் தடுமாற	-	ஆன்மாக்கள் அறியாமையால் இவ்வாறு மயங்கித்திரிய,
மலம் அறுத்து	-	ஆணவம் கன்மம் மாயை என்ற மூன்று மலங்களையும் நீக்கி,
அகலாத திருவடித்தாமரை	-	எக்காலத்தும் விட்டுப் பிரியாத திருவடித்தாமரைகளை,
என் முடியில் ஊன்றி	-	அடியேனுடைய புலைத்தலையிற் பொருந்தச் சூட்டியருளி,
அங்கம் உயிர் பொருள் எலாம்	-	எனது உடல் உயிர் பொருள்களாகிய எல்லாவற்றையும்,
கைக்கொண்டு	-	ஏன்று கொண்டருளி,
நாயினேற்கு	-	நாய்த்தன்மையையுடைய சிறியேனுக்கு,
ஆனந்த முத்திதந்த	-	சிவானந்த முத்தியைத் தந்தருளிய,
அருள் ஞான வாரியே	-	திருவருள் ஞானமாகிய பெருங்கடலாய் உள்ளவளே,
ராசை மேவிய செல்வ	-	இராசவில்லிபுரத்தில் எழுந்தருளியிருக்கும் செல்வமாகிய,
அகிலாண்டம் என்னும் அரசே	-	அகிலாண்டநாயகி என்னும் திருநாமத்தை யுடைய அரசியே என்றவாறு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

*''மங்கையர்கள் இன்பமே முத்தி என்பவர் உலகாயதர். உலகாயதம் புறப்பறச் சமயம் ஆறனுள் ஒன்று. காண்டலளவை ஒன்றே பிரமாணம்; காணப்படும் நிலம் நீர் தீ வளி என நான்கே தத்துவங்கள்; இவை நித்தப்பொருள்கள்; இவற்றின் கூட்டமே உடம்பு; பாகடையும் சுண்ணாம்பும் கூடியவழிச் செவ்வண்ணம் பிறக்குமாறு போல இவற்றின் கூட்டரவின் ஓர் உணர்வுண்டாம்; அவ்வுணர்வு உடம்பு வளர வளரும் தேயத் தேயுமாகலின், உடம்பிற்கு வேறே உயிர் என்பதும் பொய். உடம்பிற்கு இன்பத் துன்பங்கள் இயல்பாயுள்ளன; இவற்றிற்குக் காரணம் வினை என்பதும் பொய்; மயிலைச் சித்திரித்தாரையும் குயிலைக் கூவுவித்தாரையும் காணாமையின் கடவுள் உண்டென்பதும் பொய்; இம்மையின் மங்கைப் பருவத்து மகளிரோடு மணந்து உண்டு உடுத்து வாழ்வதே துறக்கவின்பம்; அது பெறாது பகைவரால் நோயால் வறுமையால் நூல்களால் பிறவாற்றால் வருந்துவதே நிரயத்துன்பம்; வேறே துறக்க நிரயம் உள என்பதும் பொய்; நான்கு பூதக் கூட்டரவில் பிராணவாயு ஒன்று நீங்கில் உணர்விழந்து உடம்பு நாசமாம்; அதுவே வீடுபேறு; வேறே வீடுபேறு உண்டு என்பதும் பொய்; இவ்வுண்மையுணராத மடவோர் மறுமையுண்டு எனக் கொண்டு தவங்கள் பட்டினி முதலியவற்றால் வருந்துவர்; கற்பு முதலிய சங்கேத (நியமன) நூல்கள் *மதுகையின்றி மதியுடையோரால் செய்யப்பட்டன. பொன் நிலம் உணவு முதலிய தானங்களை உயர்த்துக் கூறும் நூல்கள் பசியான் வருந்தி நல்கூர்ந்தோரால் செய்யப்பட்டன; தேவகுலம் தண்ணீர்ப்பந்தர் கூவல் பொய்கை சோலை முதலியன செய்தலை உயர்த்துக் கூறும் நூல்கள் வழிச் செல்வோரால் கூறப்பட்டன; ஆகலான் இவற்றைக் கைவிட்டு உழவு பசுக்காவல் வாணிகம் செங்கோன் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியினின்று இம்மை இன்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப்பயன் என்பதாம்''.

''இவ்வுலகாயதநூல் செய்தோன் பிருகற்பதி (தேவகுரு) என்றுணர்க. இவ்வுலகாயதர் தேகான்ம வாதிகளும், இந்திரியான்ம வாதிகளும், பிராணான்ம வாதிகளும், அந்தக் கரணான்ம வாதிகளும் எனப்பல திறப்படுவர்.

உலோகாயதம் சாருவாகம் எனவும், காட்சிவாதம் எனவும் பெயர்பெறும்.

*''*முதல் இருபகுதிகளும் பாடிய மேற்கோள் (அவையடக்கம்)*

மதுகை- வலிமை

.In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேகான்மவாதமாவது

அறிவு உடம்பின்கண் அன்றி நிகழக்காணவில்லை; நான் மெலிந்தேன், நான் பருத்தேன் என உடம்பினையே நான் என வழங்கக் காண்கிறோம்; ஆதலின் தேகத்தின் வேறாய் ஆன்மா என ஒன்றில்லை; தேகமே ஆன்மா என்பதாம்.

இந்திரியான்மவாதமாவது

மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐந்து இந்திரியங்களே சுவை ஒளி ஊறு ஓசை நாற்றங்களாகிய விடயங்களை அறிந்து அனுபவிக்கின்றன. ஆகலின், அவ்விந்திரியங்களே ஆன்மா; அவற்றிற்கு வேறாய் உயிரென ஒன்றில்லை என்பதாம்.

சூக்கும தேகான்மவாதமாவது

புரியட்டகவுடம்பாகிய சூக்கும தேகமே அகத்தே நின்று இந்திரியங்களைப் புறத்திற் செலுத்திப் புலன்களை அறிகின்றதனால் சூக்குமதேகமே ஆன்மா என்பதாம்.

பிராணான்மவாதமாவது

பிராணவாயு உடம்பிற் கூடி நின்று இயங்கும்போது உடம்பிற் புசிப்பும் தொழிலும் நிகழ்கின்றன; பிரிந்தபோது புசிப்பும் தொழிலும் நிக்ழாமல் உணர்ச்சியற்று உடம்பு முருடாய்க் கிடக்கின்றது. ஆகலின், சொப்பனத்தான மாத்திரையினன்றித் தொழிற்படாத சூக்குமதேகம் போலன்றிச் சுழுத்தித்தானம் துரியத்தானங்களினும் தொழிற்படுவதாகிய பிராணவாயுவே உயிர் என்பதாம்.

தத்துவ சமூகான்மவாதமாவது

உடம்பு, சூக்குமவுடம்பு, இந்தியரியங்கள், பிராணவாயு முதலியவற்றுள் ஒன்று குறைந்த வழியும் அறிவு நிகழாமையானும் எல்லாங்கூடிய வழி அது நிகழ்தலானும் அவை அனைத்துங்கூடிய சமுதாயமே ஆன்மா என்பதாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அந்தக்கரணான்மவாதமாவது

*ஏனைய கருவிகளெல்லாம் வெவ்வேறு பெயர்பெற்று நிற்பன ஆகலான் உயிராகாவாயினும் மனம் முதலிய அந்தக் கரணங்கள் *''சிந்தையைச் சீவனென்றும் சீவனைச் சிந்தையென்றும்'' கூறும் முறைபற்றி உயிரென்னும் பெயரானும் வழங்கப்படுதலான் அந்தக் கரணமே ஆன்மா என்பதாம்.

கந்தம் மடிவதே முத்தி என்பவர்

பௌத்தர் முதலியோர்,

இனிப் பௌத்தமாவது

உலகத்துப் பிறந்து இறந்துழன்று சீலம் முதலியவற்றால் நல்லுணர்வு தோன்றி முழுதுணர்ந்து முத்திபெற்றுத் தன்னைப் போற் பிறரும் உணர்ந்து உய்தற்பொருட்டுக் கருணையினால் பிடக நூல் செய்தவன் புத்தக்கடவுள். அந்நூலிற் கூறும் பொருள்களாவன: ஞானமே ஆன்மா எனப்படும்; அது நீரோட்டம் போலச் சந்தானமாய்க் கணந்தோறும் தோன்றி அழியும்; அங்ஙனம் தோன்றி அழியுங்கால் மான்மத நாற்றம் போல் முற்கணத்தின் அழிவெய்தும் ஞானத்தில் தோன்றிய வாசனை, பிற்கணத்தில் தோன்றும் ஞானத்தில் பற்றுதலால் அறிவு முதலாயின நிகழும்; மற்றும் உள்பொருள் எனப்பட்டவையெல்லாம் கணந்தோறும் தோன்றி அழியும்; இந்த ஞானத்தில் தோன்றிய வாசனை அழிவதே முத்தி என்பதாம். ஞானங்கூடக் கெடுதல் முத்தி என்பாரும் உளர்''.

''இப்பௌத்த மதத்தர் மாத்தியமிகர், யோகாசாரர், சௌத்திராந்திகர், வைபாடிகர் என நால்வகைப்படுவர். இந்நால்வரும், முறையே எல்லாப் பொருளும் சூனியம் எனவும், புறப்பொருள் சூனியம் எனவும், புறப்பொருளுண்மை வழியளவை யான் அறியப்படும் எனவும், புறப்பொருள் காட்சிப் பொருளாம் எனவும் கூறுப. இந்நால்வரும் ஆதிபுத்தனுடைய மாணாக்கர்''. ''இவருள் மாத்தியமிகர் ஆவார்:

சிற்றுரை : (சூ. 4 அதி . 1)

** சித்தியார் : சூ 4 அதி. 2) செய்யுள் : 28*

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உலகத்துப் பொருள்கள் உள்பொருளாயின் அழியா; இல்பொருளாயின் தோன்றா; உள்ளவும் இல்லவுமாம் எனின் முரணும்; இரண்டும் அல்ல எனின் உணர்ச்சி கூடா; ஆகலின், இந்நான்கு பகுதியும் இன்மையான் எல்லாப் பொருளும் சூனியமே; மயக்கத்தால் காட்சிப் பொருள் போலப் புலப்படுகின்றன என ஆசிரியன் பிடக நூற்பொருள் உணர்த்திய வழி அதனை உண்மையாகக் கொண்டு மேல் வினாவாதார்''.

''ஆசிரியன் மொழிந்தது பொருள் எனக் கோடலின் தலை மாணாக்கர். அதற்குமேல் வினா நிகழ்த்தாமையின் கடைமாணாக்கர் என இரண்டும் ஒருங்குற்றுநின்றமையின், மத்தியம மாணாக்கராய் 'மாத்தியமிகர்' எனப் பெயர் பெற்றார் என்பது''.

'யோகாசாரர்

இனி, யோகாசாரர் ஆவார். அங்ஙனம் அசிரியன் உணர்த்திய வழிப் புறப்பொருள் பாழ் என்பதனை உடம்பட்டு ஞானமும் அவ்வாறு சூனியம் ஆயின் வழங்கற்பாடு கூடாதன்றே? என வினாயினார்க்கு, நன்றே வினாயினீர்! ஞானமாத்திரம் உள்ளது; அந்த ஞானம் சாகாரம் நிராகாரம் என்று இருவகைப்படும்; அவற்றுள், வட்டம் சதுரம் கறுப்பு சிவப்பு முதலிய வடிவிற்றாய் அகத்தே தோன்றும் ஞானம் சாகாரம் எனவும், பந்தம் நீங்கியவழி அங்ஙனம் வேறுபாடின்றித் தொடர்ச்சியாய் எழுவதாகிய ஞானம் நிராகாரம் எனவும் கூறப்படும். இத்தன்மைத்தாகிய ஞானமே அன்றிப் பொருளென வேறில்லை; கனவின்கண் புறப்பொருளை அவாவாது கேவல ஞானத்தானே வழங்கக் காண்டலான் நனவின்கண் வழங்குவதும் அவ்வாறேயாம்; அவ்வுணர்வு அகத்தின் நிகழ்வதேயாயினும் அநாதி வாசனை வயத்தால் புறத்தே காணப்படுவது போலத் தோன்றா நின்றது எனக் கொள்க என்று ஆசிரியன் உணர்த்தினான். அங்ஙனம் உணர்த்தப்படடோர், ஆசிரியன் மொழிந்ததனை உடம்பட்டு அதற்கு மேல் வினாயினார் ஆகலின் யோகாசாரர் என்றாயினார் என்பது''.

''பௌத்த மதத்தில் ஆசிரியன் மொழி உடம்படுதலை ஆசாரம் எனவும் அதற்குமேல் வினாவுதலை யோகம் எனவும் குறியிட்டு வழங்குப ஆகலான், அவ்விரண்டானும் பெற்ற பெயர் என்றுணர்க''.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சௌத்திராந்திகர்

இனி, சௌத்திராந்திகராவார், அங்ஙனம் ஆசிரியன் உணர்த்திய வழிப் புறப்பொருள் முழுவதும் சூனியம் என்பதென்னை? யான் இது கண்டேன் என்று உணர்வுழி யான் என்னும் ஞானம் அகத்துப் பொருளும் இது என்று சுட்டியறியப்படுவது புறத்துப் பொருளுமாகலான் அவற்றிற்கு வேறுபாடு தெற்றென விளங்குதலானும், இரண்டும் ஒருங்கு உணர்தலே பற்றி ஒன்றென்றல் பொருந்தாமையானும், இரண்டும் ஒருங்கு உணர்தல் எனவே, வேறுபாடுண்மை தானே பெறப்படுதலானும், ஞானமே குடம் படம் முதலியவனவாகத் தோன்றா நின்றது எனக் கோடல் பொருத்தமன்று என வினாயினார்க்கு, நன்றே வினாயினீர்! புறத்துத் தோன்றுவனவும் உள்பொருளேயாம்; அவை காட்சிப்பொருளல்ல; குடவடிவிற்றாகிய ஞானம் உணர்ந்தபின் அன்றிக் குடம் உணர்தல் கூடாமையின் கணத்தில் தோன்றியழியும் குடம் முதலாயின அங்ஙனம் உணருங்காறும் நிலைபெறுதல் இன்மையால் குடம் முதலாயின தத்தம் வடிவினை ஞானத்தின் வைத்திட்டு அழிந்தபின்னை, ஞானத்துட் பற்றிய வடிவானே அங்ஙனம் இறந்துபோய குடம் முதலாயன வழியளவையின் வைத்து உணரப்படும். இவற்றிற்குக் காரணம் என்னை எனின்,

புறம் அகம் என்னும் இருவகைச் சமுதாயமாம். அவற்றுட்புறச்சமுதாயம் நிலம் முதலாயின. அவற்றிக்குக் காரணம் பரமாணுக்கள். அவை நிலவணு நீரணு தீயணு வளியணு என நால்வகைப்படும். அவை ஒருங்கு பல தொக்கவழிப் புறச்சமுதாயம் தோன்றும். இனி, அகச்சமுதாயம் சித்தமும் சித்தப் பகுதியுமாம். அவற்றிற்குக் காரணம் ஐவகைப் படும் கந்தங்கள். அவை உருவம் வேதனை ஞானம் குறி வாசனை என்பனவாம். கந்தம் என்பது சமூகம் என்னும் பொருட்டு, அவற்றுள் சித்தத்தால் சித்திக்கப்படும் சத்தம் முதலாயின உருவக்கந்தம். இவை புறத்துள்ளன ஆயினும் அகத்தில் சித்தத்தால் சிந்திக்கப்படுதலின், . அகச்சமுதாயத்துள் வைத்து எண்ணப்பட்டன. இனி, அகச்சமுதாயத்துட்பட்ட உடல் பொறி முதலியவற்றை உருவக்கந்தம் என்றலுமொன்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவ்வுருவக் கந்தத்தை உணரும் உணர்வு ஞானக் கந்தம்; அது சாகாரம் நிராகாரம் என்னும் வேறுபாட்டால் பிரவிருத்தி விஞ்ஞானம் என்றும் ஆலய விஞ்ஞானம் என்றும் இருவகைப்படும். சாகாரம் சவிகற்பமாம். நிராகாரம் நிருவிகற்பமாம்.

இனி, இவ்வுணர்வால் தோன்றும் இன்பத்துன்ப நொதுமல்கள் வேதனைக் கந்தம். சாத்தன் கொற்றன் முதலிய பெயர்கள் குறிக்கந்தம். அப்பெயர்களால் பகுத்துணரும் சவிகற்பவுணர்வு குறிக்கந்தம் எனவும், நிருவிகற்பமொன்றே ஞானக் கந்தம் எனவும் கோடலுமொன்று. அவற்றின் வாசனை வாசனைக் கந்தமாம். வாசனை எனினும் செயற்கை எனினும் ஒக்கும். குறி எனினும் சஞ்ஞை எனினும் ஒக்கும். இவ்வைந்தும் ஒருங்கே தொகுதலான் அகச்சமுதாயம் தோன்றும். இவற்றுள், உருவக்கந்தம் புறச் சமுதாயத்துள் வைக்கப்படும். ஏனை நான்குமே சித்தமும் சித்தப் பகுதியுமாகிய அகச்சமுதாயம் என்பாரும் உளர். சகமுழுதும் இவ்விருவகைச் சமுதாயத்துள் அடங்கும் என்று ஆசிரியன் உணர்த்தினான். அதுகேட்ட மாணாக்கர் இங்ஙனம் வினாவிய கடாவிற்கேற்ப அறிவுறுக்கும் சூத்திரங்கள் எவ்வளவின் முடிவுபெறும் எனக் கடாயினார். அவ்வழி ஆசிரியன் சூத்திராந்தங்கடாவிய நீர் சௌத்திராந்திகர் எனப் பெயர் பெறுக என்றமையின் அவர்க்கு அது பெயராயிற்று.

இனி, வைபாடிகராவார்

ஆசிரியன் அங்ஙனம் உணர்த்தியவழி அது கேட்ட மாணாக்கர், புறப்பொருள் ஞானத்தால் அனுமதித்தறியற்பாற்று என்றது என்னை? ஞானமே தனக்குக் காட்சிப் பொருளாகலானும், காட்சிப் பொருள் ஒன்றுமின்றாயின், வியாத்தியுணர்தற்கு இடமின்மையான் வழியளவை நிகழாதாகலானும் இது மாறுகோள் உரைபோலும் எனக் கடாயினார் ஆகலின், அவர் வைபாடிகர் எனப்பட்டார். மாறுகோளுரை எனினும் விபாடை எனினும் ஒக்கும். அவர்க்குப் புறப்பொருள் காட்சிப் பொருளாம் எனவும் ஆசிரியன் உணர்த்தினான்.

இங்ஙனம் வினாயினார் கருத்துக்கேற்ப நால்வகைப் படுத்துச் செவியறிவுறுப்பினும், கணபங்கம் முதலியவற்றை உடம்பட்டுக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கோடலான் எல்லாரும் முறையானே முழுவதும் சூனியம் என்று கோடற்கு உரியர் என்பது ஆசிரியன் கருத்து. அங்ஙனமாயினும் வினாயினார் கருத்துக்கேற்ப ஆசிரியன் கூறிய விடைப் பொருளை உறுதியாகக் கோடலின், மதம் வேறுபட்டு நால்வராயினார். இங்ஙனம் பௌத்தமதம் நான்கும் கண்டுகொள்க.

இவருள், உலகாயதன் காட்சிவாதி எனவும், பௌத்தன் கணபங்கவாதி எனவும், ஆருகதன் அநேகாந்தவாதி எனவும், பௌத்தருள்ளும் மாத்தியமிகன் சூனியவாதி எனவும், யோகாசாரன் விஞ்ஞான வாதி எனவும், ஏனை இருவரும் சமுதாய வாதிகள் எனவும் உணர்க.*

வரும் முக்குணம் கெடுதல் முத்தி என்பது

பிரகிருதி தத்துவமானது, தூல சூக்குமமாய் எல்லாப் பதார்த்தங்களுக்கும் காரணமுமாய் முக்குணங்களும் ஒத்து நிற்கின்றதே தனக்கு வடிவமாய், அமூர்த்தமாயிருக்கும். புத்தி முதல் பிருதிவி ஈறாகிய தத்துவம் இருபத்து மூன்றும் இதனுடைய வியாத்தியாயிருக்கும். வியாத்தி - நியதமான உடனிகழ்ச்சி. அதனோடுங் கூடின் சுத்த புருடனும் பாலனாகிய பிள்ளைகளைப் போலச் சேட்டையுண்டாகிப் பல யோனிகளையும் எடுத்து இந்தக் குணங்களோடும் அநாதியே கூடிப் புத்தியை உடைத்தாய் வித்தையின் வசத்திலே ஒழுகி, சனன சம்பந்தம் உண்டாயிருக்கின்ற சுகதுக்கமான குணங்களும் உண்டாயிருக்கும் அந்தப் பிரகிருதியினுடைய தன்மையை அறிந்து, புத்தியை அடைந்திருக்கிற அறியாமைபோய், விகிருதியால் உண்டான சுக துக்கங்களைப் பிரகிருதிக்கு உண்டானது என்று கண்டு, இது ஆன்மாவுக்கு இல்லை என்று குணத்திரயங்கள் அடங்குவதே முதல் என்பர். ஆகலின், முக்குணங்கெடுதல் முத்தி என்னப்பட்டது. இவ்வாறு கூறுவோர் நிரீச்சுர சாங்கியர். ''மூலம் புரியட்டகம்'' சித்தியார்.

(பௌத்தசமய விளக்கம்: பாடிய மேற்கொள் (அவையடக்கம்)*

பூதமே யென் றும்வரு பொறியென்று மனமாதி
பொருளென்று நீள்கலாதி
பொருளென்று முயர்சுத்த மாயைபொரு ளென்றுமிப்
புவியிற் சிருட்டிசெய்யும்
நாதர்பொரு ளென்றுமர வணையிற் றுயின்றவொரு
நாரணன் பொர்ருளதென்றும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நானாவி தங்குளறி னோர்குருடர் பலர்கூடி
நாடியொளி தேடுமாபோல்
பேதமுறு பிறவியிற் சுழல்வதல் லாலுண்மை
பெற்றிடுவ துண்டோ சொலாய்
பின்னுமுன் னும்பக்க மேல்கீழு மாயண்ட
பித்திக ளுடைத்துமண்டி
ஆதிநடு வந்தமு மிலாமலடி நாயேனை
யகலாம லாண்டுகொண்ட
அருண்ஞான வாரியே ராசைமே வியசெல்வ
வகிலாண்ட மென்னுமரசே. (10)

இ - ள்:

பின்னும் முன்னும் பக்கம் மேல் கீழும் ஆய் -	பின்னிடமும் முன்னிடமும் பக்கங்களும் மேலும் கீழும் ஆகியஎல்லா இடங்களிலும் (எள்ளினுள் எண்ணெய் போல) நிறைந்து,
அண்ட பித்திகள் உடைத்து -	அண்டச் சுவர்களையும் தகர்த்து,
ஆதி நடு அந்தமும் இலாமல் மண்டி -	முதல் இடை கடைகளும் இல்லாமல் நிறைந்து (செறிந்து),
அடி நாயேனை அகலாமல் -	மிக்க கீழ்மைக்குணமுடைய அடியேனை விட்டுப் பிரியாமல் நின்று,
ஆண்டுகொண்ட அருள் ஞான வாரியே -	அடிமை கொண்டருளிய திருவருள் ஞானமயமாகிய கடலாயுள்ளவளே,
ராசை மேவிய செல்வ -	இராசவில்லிபுரம் என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள செல்வமாகிய,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அகிலாண்டம் என்னும் அரசே	-	அகிலாண்ட நாயகி யென்னும் திருநாமமுடைய அரசியே,
பூதமே (பொருள்) என்றும்	-	பிருதிவி முதலிய பூதங்களே மெய்ப்பொருள் என்றும்,
வருபொறி (பொருள்) என்றும்	-	அப்பூத விடயங்களை அறியும் பொருட்டு வந்த புறக்கருவிகளே மெய்ப்பொருள் என்றும்,
மனம் ஆதிபொருள் என்றும்	-	மனம் முதலிய அகக்கருவிகளே மெய்ப்பொருள் என்றும்,
நீள் கலாதி பொருள் என்றும்	-	மிக்க கலை முதலிய மாயேயங்களே மெய்ப்பொருள் என்றும்,
உயர் சுத்தமாயை பொருள் என்றும்	-	அசுத்த மாயையின் மேலாக உள்ள சுத்தமாயையே மெய்ப்பொருள் என்றும்,
சிருட்டிசெய்யும் நாதர் பொருள் என்றும்	-	படைத்தற்றொழிலைச் செய்யும் தலைவராகிய பிரமனே மெய்ப்பொருள் என்றும்,
அரவு அணையில் துயின்ற	-	ஆதிசேடனாகிய பாயலில் பள்ளிகொள்ளும்,
ஒரு நாரணன் பொருள் அது என்றும்	-	ஒப்பற்ற நாராயணனே மெய்ப்பொருள் என்றும்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இ புவியில்	-	இந்நிலவுலகத்திலே,
நானாவிதம் குளறினோர்	-	பலபல விதமாகப் பொருளின்றிக் கூறிப் பிதற்றுவோர்,
குருடர் பலர் கூடி	-	பிறவிக் குருடர் பலர் ஒன்றாகக் குழுமி,
நாடி ஒளி தேடுமா போல்	-	ஆராய்ந்து ஒளியினைக் கண்டு பிடிக்கும் முறைமையைப் போன்று,
பேதம் உறு பிறவியில்	-	பலவகைப்பட்ட பிறவியாகிய கடலிலே,
சுழல்வது அல்லால்	-	சுழன்று உழல்வதேயல்லாமல்,
உண்மை பெற்றிடுவது உண்டோ	-	உண்மையான உணர்ச்சியைப்பெற்று மேலான அனுபவத்தில் திளைத்திருத்தல் கூடுமோ,
சொலாய்	-	அடியேனுக்குக் கூறி அருள்வாயாக எ-று.

மூலமும் உரையும் முற்றிற்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துறைசைக் குருபூசை அட்டவணை:

சித்திரை மாதம்

D	அத்தம்:	உமாபதி சிவம்	கொற்றவன்குடி
3	அவிட்டம்:	அம்பலவாணதேசிகர்	துறைசை
8	உரோகிணி:	மாசிலாமணி தேசிகர்	திருவெண்காடு
17	சதயம்:	அம்பலவாணதேசிகர்	இடைமருது

வைகாசி

11	பூரட்டாதி:	பின்வேலப்பதேசிகர்	திருப்பெருந்துறை

ஆனி

	பரணி:	துவிதீய சிவப்பிரகாச தேசிகர்	வடதளி (முழையூர்)
	பரணி:	துவிதீய வேலப்பதேசிகர்	பேரூர்
12	பரணி:	திருச்சிற்றம்பல தேசிகர்	துறைசை
15	பூரம்:	அம்பலவாண தேசிகர்	துறைசை

ஆவணி

C.	உத்திரம்:	மறைஞானசம்பந்தர்	திருக்களாஞ்சேரி
7	உத்திரட்டாதி:	பிற்குமாரசாமிதேசிகர்	சுசீந்திரம்

புரட்டாசி

B	பூரம்:	அருணந்திசிவம்	திருத்துறையூர்
10	மூலம்:	வேலப்பதேசிகர்	சங்கரநயினார்கோயில்
21	பரணி:	சுப்பிரமணியதேசிகர்	துறைசை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐப்பசி

A	சுவாதி:	ஸ்ரீமெய்கண்டதேவர்	திருவெண்ணெய்நல்லூர்
19	அவிட்டம்:	வைத்தியலிங்கதேசிகர்	மாயூரம்

கார்த்திகை

4	அனுஷம்:	உருத்திரகோடி தேசிகர்	மதுரை
5	உத்திராடம்:	வேலப்ப தேசிகர்	திருப்பூவணம்
6	உத்திராடம்:	குமாரசாமிதேசிகர்	சுசீந்திரம்
	உத்திரம்:	திரிதீய சுவாமிநாத தேசிகர்	அருணை
14	கார்த்திகை:	சுப்பிரமணிய தேசிகர்	துறைசை
9	அனுஷம்:	இராமலிங்கதேசிகர்	துறைசை

மார்கழி

E	திருவாதிரை:	அருணமச்சிவாயதேசிகர்	கொற்றவன்குடி
	மூலம் :	துவிதீய சிவக்கொழுந்துதேசிகர்	துறைசை
13	கேட்டை:	அம்பலவாண தேசிகர்	துறைசை
16	சுவாதி:	சுப்பிரமணியதேசிகர்	துறைசை

தை

1	அசுபதி:	ஸ்ரீநமச்சிவாயமூர்த்திகள்	துறைசை
18	பரணி:	சுப்பிரமணியதேசிகர்	துறைசை
2	சுவாதி:	மறைஞான தேசிகர்	துறைசை
	கார்த்திகை:	துவிதீய கனகசபாபதிதேசிகர்	தளிகை
	கார்த்திகை:	துவிதீய நமச்சிவாயதேசிகர்	தளிகை
	உத்திரட்டாதி:	துவிதீய அம்பலவாண தேசிகர்	கல்லிடைக்குறிச்சி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாசி

	சித்திரை:	துவிதீய தட்சிணாமூர்த்திதேசிகர்	துறைசை
	சித்திரை:	துவிதீயமுத்தம்பலவாணதேசிகர்	திருக்குற்றாலம்
	அவிட்டம்:	துவிதீயசுப்பிரமணியதேசிகர்	துறைசை

பங்குனி

20	திருவாதிரை:	அம்பலவாணதேசிகர்	இடைமருது
22	திருவோணம் :	அம்பலவாண தேசிகர்	துறைசை

குறிப்பு:

இவ்வாதீனத்துப் பரிபூரணமான சந்திதானங்களுக்கு மாதங்களில் ஆடியும், நட்சத்திரங்களில் மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், விசாகம், பூராடம், இரேவதி ஆகிய நட்சத்திரங்களும் இதுவரையில் இல்லை.

திராவிடமாபாடியகாரர் ஸ்ரீ மாதவச்சிவஞான யோகிகள் சித்திரை ஆயிலியம் திருவாவடுதுறை, கவிராட்சஸ ஸ்ரீ கச்சியப்பமுனிவர் சித்திரைப் புனர்பூசம் காஞ்சிபுரம்.

சந்தானாசாரியார், அருள்நமச்சிவாய தேசிகர் ஆகியோரின் வரிசை முறையினைக் குறிப்பிட A,B, C, D, E என்ற அடையாளங்கள் முதற்பதிப்பின் பதிப்பாசிரியரால் கொடுக்கப்பட்டுள்ளன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருநந்திமரபு மெய்கண்ட சந்தானத்து ஆசாரியர்கள்

பரிபூரணத்தலம், மாதம், திருநட்சத்திரங்கள் முதலியன

நிலைமண்டில ஆசிரியப்பா

புகழ்மலி வெண்ணெய்நல் லூரின்மெய் கண்டான்
திகழ்மதி துலாத்திற் சேர்ந்த சுவாதி
அறையு மருணந்தி யழகமைந் திலகுறு
துறையூர் கன்னியிற் றுலங்கிடு பூரம்
பரன்மறை ஞான சம்பந்த தேசிகன்
திருக்களாஞ் சேரியிற் சிங்கமுத் திரமாம்
குருவுமா பதிசிவம் கொற்றவன் குடியே
மருவுசித் திரைமதி வந்திடு மத்தம்
மாணரு ணமச்சி வாயதே சிகனும்
பேணுகொற் றவன்குடிப் பிறங்குதனு வாதிரை
துறைசைப் பதியருள் துலங்குபஞ் சாக்கர
இறைவனை நிறுத்திய விருள்கடி சித்தர்
சிவப்பிர காச தேவரெந் நாளும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உவப்புட னுலாவு மறைவனம் நவகோடி
சித்திகேத் திரமாம் சிவணுறு மாதமும்
பத்திசெய் நாளுமப் பரமனுக் கில்லை
சுத்தாத் துவித முத்தியை யருள்கோ
முத்திபஞ் சாக்கரன் மகரத் தலைநாள்
சிவப்பிர காசத்வி தீயன்பட் டீச்சுரம்
தவலரும் வடதளி தகுமானிப் பரணி
சீர்மறை ஞான தேசிகன் றுறைசையில்
ஏர்மிகு மகரத் தியைந்திடு சுவாதி
அறநூ லுணர்த்து மம்பல வாணன்
சிறந்திடு துறைசையே சித்திரை யவிட்டம்
தட்சிணா மூர்த்தியாந் தகுதுவி தீயன்
பட்சமார் துறைசைப் பதிமாசிச் சித்திரை
உருத்திர கோடியா ரோங்கடி யாருளக்
கறுத்துறு மதுரையிற் கார்த்திகை யனுடம்
வேலப்ப தேசிகன் விளம்பிடு பூவணம்
ஏலுறுங் கார்த்திகை யியையுத்தி ராடம்
மிஞ்சுசீர்க் குமார சாமிசு சீந்திரம்
விஞ்சுதேள் மதியின் மேவுத்தி ராடம்
பிற்குமார சாமிப் பெரியோன் சுசீந்திரம்
உற்றநல் லாவணி யுத்திரட் டாதி
முத்தம் பலவாணன் முன்னுதவி தீயன்
நத்திடு குற்றலாம் நற்கும்பம் சித்திரை
நீசற் கனமிடு நேசமா சிலாமணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசறு வெண்கா டதிற்றக ருரோகிணி
துவிதீய குரவனாச் சொலுஞ்சிவக் கொழுந்து
புவிபுகழ் துறைசை புகல்தனு மூலம்
ஏதமில் திரிதீய விருங்குரு சுவாமி
நாத னருணை நவில்தே ளுத்திரம்
குருவி ராம லிங்கன் துறைசைத்
திருநகர் தேண்மதி யனுடத் திருநாள்
நலமிகு சங்கர நயினார் கோயில்
தலம்வே லப்பன் சார்கன்னி மூலம்
துவிதீய குரவன் தொல்வே லப்பன்
புவிதனிற் பேரூர் புகலானிப் பரணி
பின்வே லப்ப தேசிகன் பெருந்துறை
மன்னிய விடப மதிபூரட் டாதி
அழகார் திருச்சிற் றம்பல தேசிகன்
பழிதபுந் துறைசைப் பதியானிப் பரணி
எற்றவழ் மதில்சூழ்ந் திலகுறு வளமார்
நற்றவத் துறைசை நமச்சிவாயர்க்கு
பதின்மூன் றாமம் பலவாண தேசிகன்
வதிதரு துறைசை மார்கழிக் கேட்டை
மாண்டகு சுப்பிர மணிய தேசிகன்
காண்டகு மப்பதி கார்த்திகைக் கார்த்திகை
பாடுறு துவிதீய கனக சபாபதி
பீடுறு தளிகை பெருந்தைக் கார்த்திகை
சுப்பிர மணியனாத் தோன்றுதுவி தீயன்
செப்புகோ முத்தி திகழ்குட மவிட்டம்
அம்பல வாண வாரியன் துறைசை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நம்புறு மானி நலமிகு பூரம்
இப்பிர பஞ்சத் தெழின்மேல கரத்துச்
சுப்பிர மணிய சுகுணசிந் தாமணி
ஆவடு துறைசை யமைதனுச் சுவாதி
மேவுறு பேட்டை மிகுவளத் தொருவன்
வடமொழி யறிவு வாய்ந்தவர் தம்மையும்
திடமிகு தென்மொழி தெளிந்தவர் தம்மையும்
வாதினின் வென்றிடு வண்மையின் மாண்பா
லேதமக் கிணையிலா தேயுயர் துவிதீயன்
திகழ்நமச் சிவாய தேசி கோத்தமன்
தகுபுகழ்த் தளிகை தையுறு கார்த்திகை
திக்கெலாம் புகழத் தேவாரத் திருமுறை
மிக்கவர்ப் போற்றி மிகுபதி னேழெனும்
அம்பல வாண வருட்குரு வள்ளல்
நம்ப ரிடைமரு திடைத்தகர்ச் சதயம்
சுப்பிர மணிய தேசிகன் துறைசையில்
கப்பிலா மகரம் கருதுறு பரணி
வைத்திய லிங்க மாங்குரு மயூரம்
மெய்த்துறு துலாமதி மேவிய வவிட்டம்
நம்புறு மம்பல வாண தேசிகன்
பம்புசீர்த் திருவிடை மருதூர் பங்குனித்
திங்களி லாதிரை தேசுறு தமிழகம்
மங்குத லில்லாப் புகழுடன் வைகிய
திப்பிய குரவன் சுப்பிர மணியன்
பொற்புறு துறைசை புரட்டாதிப் பரணி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இருபத் திரண்டாம் இலங்கருட் குரவன்
அம்பல வாண தேசிகன் துறைசை
பங்குனித் திங்கள் பகர்திரு வோணம்
துவிதீய குரவனாம் அம்பல வாணன்
நவமுறு திங்கள்தை உத்திரட் டாதி
ஆகுமிக் குரவர் சிவபரி பூரணம்
ஆகிய நாள்களில் தேகத் தாம்பயன்
இதுவெனத் தேறி இயற்றுக பூசையை
மதுமலர் கொண்டு மாண்புற இயற்றுக
பூசையை யன்புடன் புனிதமா வியற்றின்
மாசறு சிவகதி மதித்திடப் பெறுவரே.

குறிப்பு:

இவ்வாசிரியப்பா என் ஆசிரியர் இவ்வாதீன வித்துவான் ஸ்ரீ சு. பொன்னோதுவா மூர்த்திகளால் இயற்றப் பெற்றுள்ளது. இதில் 80 வரிகளுக்கு மேல் உள்ள (81-88) எட்டு வரிகள் அடியேனால் இடையில் பாடிச் சேர்க்கப்பட்டுள்ளன.

- த. ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை
ஆதீனப்புலவர்

89 - 93 வரை உள்ள ஐந்து அடிகள் அடியேனால் இடையில் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளன.

- சு. குஞ்சிதபாதம்
ஆதீனப்புலவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

சிவமயம்

அறுபத்துமூவர் திருநட்சத்திரம்

நேரிசை வெண்பா

ஒன்றகல வெட்டெட்டா ஓதுமடி யாரன்பால்
துன்றுமதி நாளினிது சொல்லவே - வென்றிதரும்
பொன்னிதிவி னாயகனார் பூமுடிமே லாடுதிருச்
சன்னிதிவி நாயகனார் தாள்.

நிலைமண்டில ஆசிரியப்பா

தில்லைவா ழந்தணர் திருவரு ளாலவர்
மல்குசீர்ப் பதத்தை மகிழ்வொடு வணங்கிக்
கடிதிரு நீல கண்டர்தை விசாகம்
வடிவியற் பகையார் மார்கழி யுத்திரம்
வருமிளை யான்குடி மாறரா வணிமகம்
கருதுமெய்ப் பொருளார் கார்த்திகை யுத்திரம்
விறன்மிண்ட கண்டர் மேடமா திரைநாள்
அறனமர் நீதி யானிப் பூரம்
மாணெறி பத்தர் மாசியி லத்தம்
காணுமே னாதி யார்கன்னி யுத்திராடம்
மலர்கண் ணப்பர் மகரமான் றலையில்
குலவுகுங் குலியர் கோளரி மூலம்
தருமா னக்கஞ் சாறர்விற் சுவாதி
அரிவாட்டா யர்தை யாதிரை நாளில்
ஆனாயர் கார்த்திகை யத்த நாளில்
கான மூர்த்தியார் கடகத் தாரன்
முருக ரிடப மூல மதனில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உருத்திர பசுபதி யுயர்கன்னி முன்னாள்
பொருந்திரு நாளைப் போவார்கன் னியிற்பார்
திருக்குறிப் படியார் சித்திரைச் சுவாதி
சண்டீச ராமவர் தையுத் திரத்தில்
தண்டமி ழப்பர் தகரிற் சதயம்
குலச்சிறை நாயனார் கோளரி யனுடம்
அலகில் குறும்பர் ஆடியிற் சித்திரை
அருள்கா ரைக்கா லம்மைமீன் விளக்காம்
அருகிலப் பூதி தையதிற் சதயம்
கமைநீல நக்கர் காளைமூ லத்தின்
நமிநந்தி யடிகள் நாள்விடைப் பூசம்
ஞானசம் பந்தர் நாள்விடை மூலம்
ஆன கலிக்காம ரானிரே வதியில்
அருட்டிரு மூலர் ஐப்பசி முன்னாள்
வருதண்டி யடிகள் வளர்மீன் சதயம்
சேமமா மூர்க்கர் தேள்மதி மூலம்
சோமாசி மாறர் தொழுவிடை யரவில்
சாக்கிய நாயனார் தனுப்பூ ராடம்
தேக்கிய சிறப்புலி தேட்பூ ராடம்
சேர்சிறுத் தொண்டர் சித்திரைப் பரணி
சேரமான் கடகஞ் சேர்ந்தசோ தியினில்
கணநாதர் மீனங் கலந்தவா திரையில்
குணமாங் கூற்றுவர் குளிர்மதி யாதிரை
பொய்யடிமை யில்லாப் புலவர்தாள் போற்றி
மெய்ப்புகழ்ச் சோழர் மிளிர்குளிர் ஆரல்
நரசிங்க முனையர் நற்கன்னி சதயம்
திரவதி பத்தர் சிங்கவா யிலியம்
கலிக்கம்பர் மகரக் கடைநா ளதனில்
கலிய ராடியிற் கலந்தவிந் திரனாள்
தூயசிற் சத்தியார் துலாப்பூ சத்தில்
ஐயர்கா டவர்கோ னைப்பசி மூலம்
கணம்புல்ல நாயனார் கார்த்திகை யங்கி
கணஞ்சேர் காரியார் கடம்பூ ராடம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தூநெடு மாறர் துலாமதிப் பரணி
வாயிலார் நாயனார் மார்கழி யிரேவதி
வெம்முனை யடுவார் மீனப் பூசம்
செம்மையா நங்கழற் சிங்கர்சேப் பரணி
மருவிடங் கழியார் மதிதுலா வாரல்
செருத்துணை நாயனார் சிங்கப் பூசம்
சேட்புகழ்த் துணையார் சிங்கவா யிலியம்
கோட்புலி நாயனார் குளிர்மதி கேட்டை
பத்தராய்ப் பணிவார் பரமனைப் பாடுவார்
சித்தத் தைச்சிவன் பாலே சேர்த்துளார்
அப்புறு செய்த்திரு வாரூர்ப் பிறந்தார்
முப்பொழு துந்திரு மேனி தீண்டுவார்
முப்புவி தொழுமுழு நீறு பூசுவார்
அப்பாலு மடிச்சார்ந் தாரை வணங்கிப்
பூசலா ரைப்பசி புகுமனு டத்தின்
மாசிலா மானியார் மைம்மதி யுரோகிணி
மிகுசிவ நேசர் மீனரோ கணிநாள்
தொகுபுகழ்ச் செங்கட் சோழர் குடக்குன்
றடுநீல கண்டயாழ்ப் பாணர்சே மூலம்
சடையனார் மார்கழி சாருமா திரைநாள்
இசைஞானி மேடத் திசைந்தசித் திரையாம்
வசையிலா விம்மதி மருவுமிந் நாளில்
பரகதி யடைந்த பத்தரைப் பாடிக்
கருதுவன் றொண்டர் கடகச் சுவாதியாம்
குருபூசை நாட்களில் குறைவிலா தவ்வவர்
வருபூசை யியற்றினோர் மாநிலத் தோங்கித்
தவப்பயன் முதிர்ந்து சார்கயி லாயத்
திறைவர் திருவடி யியைதல் திண்ணமே.

குறிப்பு: இது இவ்வாதீன வித்துவானாக இருந்த ஸ்ரீ பொன்னோதுவாமூர்த்திகள் எழுதி வைத்திருந்த குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மாதம்

சித்திரை	-	மேடம், தகர், மை.
வைகாசி	-	இடபம், காளை, விடை, சே.
ஆடி	-	கடகம், குளிர்.
ஆவணி	-	சிங்கம், கோளரி.
புரட்டாதி	-	கன்னி.
ஐப்பசி	-	துலாம்.
கார்த்திகை	-	தேள்.
மார்கழி	-	தனு, வில்.
தை	-	மகரம்.
பங்குனி	-	மீனம், மீன்.

நட்சத்திரம்

முன்னாள்	-	அசுபதி.
ஆரல், அங்கி	-	கார்த்திகை.
பார்	-	உரோகிணி.
மான்றலை	-	மிருகசீரிடம்.
அரவு	-	ஆயிலியம்.
விளக்கு	-	சோதி, சுவாதி.
இந்திரனாள்	-	கேட்டை.
குன்று	-	சதயம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ

அறுபத்துமூவர் திருநட்சத்திரமும் ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் திருநட்சத்திரமும்

அந்தாதிக் கலித்துறை

மகர மதியின் மகசிரங் கண்ணப்பர் வான்பகனாட்
பகருந்தண் டீச ரரிவாட்ட ரம்பிகை பங்கர்தந்தாள்
நிகரில் விசாகத்தி னின்னீல கண்டரப் பூதிகுன்றா
முகளுங் கலிக்கம்பர் நாவாய் சிவபதத் தொன்றினரே

மகரமதி - தைமாதம். மகசிரம் - மிருகசீரிடம். பகனாள் - உத்திரம், அம்பிகைபாகன் நாள் - திருவாதிரை. குன்று - சதயம். நாவாய் - இரேவதி.

ஒன்றிடு மாசியத் தம்மெறி
பத்த ருடைகுள நாள்
நன்றறி காரி யெனு நாய
னார் நரை யேறுயர்த்த
கொன்றைச் சடையருக் கன்பர்செங்
கட்சோழர் குன்றெனுநாட்
சென்றனர் மேலாம் பரகதிச்
செல்வம் செழிப்புறவே. 2

அத்தம் - அஸ்தம். உடைகுளம் - பூராடம். குன்றெனு நாள் - சதயம்.

செழிப்புறு பாற்குனி ரோகிணி
நேசரச் செங்கையினில்
பழிப்பில் புகழ்சேர் கணநாதர்
பூசம் பலமுறையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒழிப்பின் முனையடு வார்காரைக்
காலம்மை யொண்விளக்காம்
இழிப்பில் சதயநற் றண்டியச்
சித்தியி லெய் தினரே. 3

பாற்குனி - பல்குனி. பங்குனி. செங்கை - திருவாதிரை. விளக்கு - சுவாதி.

சித்திரை மாதம் பரணி சிறுத்தொண்டர் சேர்கட்டின்
மைத்துறு கண்மங்கை யர்க்கர சித்தாய் மறைமுதனாட்
சுத்த முறும்விறன் மிண்டரச் சித்திரை தொல்லிசைஞா
னித்தகை யாரிவர் பாதங்களைத்தொழு தெண்ணுவமே.

சகடு - உரோகிணி. மறைமுதல்நாள் - திருவாதிரை.

எண்ணிடுஞ் சோதி திருக்குறிப்
புத்தொண்ட ரென்பவரே
மண்ணிடை வெய்ய வமணர்கள்
செய்திடும் வாதையெலாம்
கண்ணிட லின்றிச் சிவபெரு
மான் கழல் கண்ணிப்பரம்
நண்ணினர் போர் திரு நாவுக்
கரசெனு நற்றவரே. 5

சோதி - சுவாதி. போர் - சதயம்.

நல்லவை காசி பரணி
கழற்சிங்கர் நாட்டிடுந்தை
ஒல்லு நமி நந்தி யென்னு
மடிக ளுயர்கவையிற்
சொல்லுஞ்சோ மாசிமா றன்னெனுந்
தோன்றலித் தொல்புவியை
வெல்லு மமணரை வென்ஞான
சம்பந்தர் மேவினரே. 6

தை - பூசம். கௌவை = கவை, ஆயிலியம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மேலாகு மூலத் தினத்தின்
முருகர்மெய்ந் நீலநக்கர்
பாலார் திருநீல கண்டயாழ்ப்
பாணரும் பாங்கிருந்து
நாலார் மறைப்படி மங்கல
நாண்பெற்ற நங்கையரும்
சேலாரு மைக்க ணுமைகோ
னொடுமொன்றிச் சேர்ந்தனரே. 7

மூலம் - மூலநாள்.

சேரானி மாமக மாணிக்க வாசக தேசிகர்மற்(று)
ஏராரும் பூரத் தமர் நீதி யென்றுல கேத்த நின்றோர்
சீரா ரிரேவதி நாட்கலிக் காமர் சிறுபிறையோ(டு)
ஆரா றணியுஞ் சடையா ரடிநில லார்ந்தனரே. 8

மா மகம் - சிறந்த மகநாள்.

தனியாடி மாதநற் கார்த்திகை மூர்த்தி சதாசிவனாள்
இனிதாருங் கூற்றுவ ராமெரி நாட்புகழ்ச் சோழரெங்கும்
தொனியாருஞ் சித்திரை தூய பெருமிழ லைக்குறும்பர்
கனியாருஞ் சோதியிற் சுந்தர மூர்த்தி கயந்தலையே. 9

சதாசிவன் நாள் - திருவாதிரை. எரிநாள் - கார்த்திகை. சோதி - சுவாதி. கயந்தலை - அயிராவண யானையின் மீதிலேறி.

கயந்தலை மீதிற் கயிலையை நோக்கிக் கடுகிடும்போ(து)
அயந்தனி லேறித் தொடர்கழ றிற்றறி வார்க்குமஃதே
சயந்தரு கேட்டை கலியரத் தாழ்வி றினமெவரும்
நயந்துறக் கோட்புலி நாயனார் மேற்கதி நண்ணினரே.

கயம் - அராவணம் என்னும் யானை. அயம் - குதிரை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நண்ணிடு மாவணிப் பூசஞ் செருத்துணை நல்லகவ்வை
எண்ணு மதிபத்த ரேரிளை யான்குடி மாறர்மகம்
கண்ணு மனுடங் குலச்சிறை யாயில் புகழ்த்துணையார்
மண்ணும் புகழும் கலயரை மூலத்து வாழ்த்துவரே. 11

கவ்வை =கவை. ஆயிலியம். ஆயில் - ஆயில்யம்.

வருகன்னி யச்சு வினிநர் ளுருத்ர பசுபதியாம்
திரமா முரோகிணி நாட்டிரு நாளைப்போ வார்கணி
குரவுத் திராடத்தி லேனாதி நாத ருயர்சதயம் (தர்க்)
பரமார்ந் தனர்நர முனையரென் பண்பினரே. 12

கன்னி - புரட்டாதி மாதம். அச்சுவினி - அசுபதி. கணிதர் - சோதிடர்.

பண்பாரு மைப்பசி யச்சு வினிதிரு மூலர்பலன்
மண்பாற் பரணி யினினின்ற சீர்நெடு மாறரங்கி
நண்பா மிடங்கழி சத்திதை பூசலை நாட்பனையாம்
ஒண்பா ரிலையடி கண்மூல நாளிலென் றோதுவரே. 13

அங்கி - கார்த்திகை. பனை - அனுடம்.

ஓதுறு கார்த்திகை யாரல் கணம்புல்ல ருத்திரமே
சாதுறு மெய்ப்பொரு ளத்தமா னாயர் தணிவின்மூலம்
வாதுறு மூர்க்கர்பூ ராடஞ் சிறப்புலி மற்றிவர்தாம்
மீதுறு கின்ற சிவபுரத் தண்மி விளங்கினரே. 14

ஆரல் - கார்த்திகை.

விளங்குநன் மார்கழி யிற்றிரு
வாதிரை மெய்ச்சடையார்
வளங்கொளுஞ் சோதிநன் மானக்கஞ்
சாறர் மகிழ்சல நாள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

துளங்கலில் சாக்கிய ருத்திரம்
தூய வியற்பகையார்
களங்கமி னாவாயில் வாயிலா
ரென்று கருதுமினே. 15

சலநாள் - பூராடம். நாவாய் -இரேவதி. களங்கமில் நாவாயில்

மின்னார் சடைமுடி யாரடி
யார்செய்யு மெய்த்தொழிலை
உன்னா வழிபடு வோர்கள்
வருதுய ரொன்றுமின்றிப்
பன்னாளிப் பாரினி லின்பமுந்
துய்த்துப் பரையொடுறும்
என்னா யகன்மகி முஞ்சிவ
லோகத்தி லெய்துவரே. 18

பரை - பராசத்தி, உமாதேவியார்.

முற்றிற்று

குறிப்பு: இதனை இயற்றியவர் நெல்லை, ஸ்ரீ நெல்லையப்ப நாவலர் என்பர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உத்தராயன புண்ணியகாலம்

தை: 6

மிருகசீரிடம்	-	கண்ணப்பர்
திருவாதிரை	-	அரிவாட்டாயர்
உத்திரம்	-	சண்டேசர்
விசாகம்	-	திருநீலகண்டர்
சதயம்	-	அப்பூதியடிகள்
இரேவதி	-	கலிக்கம்பர்

மாசி: 3

அத்தம்	-	எறிபத்தர்
பூராடம்	-	காரியார்
சதயம்	-	கோச்செங்கட் சோழர்

பங்குனி: 5

உரோகிணி	-	நேசர்
திருவாதிரை	-	கணநாதர்
பூசம்	-	முனையடுவார்
சுவாதி	-	காரைக்காலம்மையார்
சதயம்	-	தண்டியடிகள்

சித்திரை:6

பரணி	-	சிறுத்தொண்டர்
உரோகிணி	-	மங்கையர்க்கரசியார்
திருவாதிரை	-	விறன்மிண்டர்
சித்திரை	-	இசைஞானியார்
சுவாதி	-	திருக்குறிப்புத்தொண்டர்
சதயம்	-	திருநாவுக்கரசர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வைகாசி: 7

..ரணி	-	கழற்சிங்கர்
பூசம்	-	நமிநந்தியடிகள்
ஆயிலியம்	-	சோமாசிமாறர்
மூலம்	-	திருஞானசம்பந்தர்
மூலம்	-	முருகர்
மூலம்	-	திருநீலக்கர்
மூலம்	-	திருநீலகண்டயாழ்ப்பாணர்

ஆனி: 3

மகம்	-	மாணிக்கவாசகர்
பூரம்	-	அமர்நீதிநாயனார்
இரேவதி	-	ஏயர்கோன் கலிக்காமர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தட்சிணாயன புண்ணியகாலம்

ஆடி: 8

கார்த்திகை	-	மூர்த்திநாயனார்
கார்த்திகை	-	புகழ்ச்சோழர்
திருவாதிரை	-	கூற்றுவர்
சித்திரை	-	பெருமிழலைக்குறும்பர்
சுவாதி	-	சுந்தரமூர்த்திநாயனார்
சுவாதி	-	கழறிற்றறிவார்
கேட்டை	-	கலியர்
கேட்டை	-	கோட்புலியார்

ஆவணி: 6

பூசம்	-	செருத்துணையார்
ஆயிலியம்	-	அதிபத்தர்
ஆயிலியம்	-	புகழ்த்துணையார்
மகம்	-	இளையான்குடிமாறர்
அனுடம்	-	குலச்சிறையார்
மூலம்	-	குங்குலியக்கலயர்

புரட்டாதி: 4

அசுபதி	-	உருத்திரபசுபதியார்
உரோகிணி	-	திருநாளைப்போவார்
உத்திராடம்	-	ஏனாதிநாதர்
சதயம்	-	நரசிங்கமுனையரையர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஐப்பசி: 6

அசுபதி	-	திருமூலர்
பரணி	-	நின்றசீர்நெடுமாறர்
கார்த்திகை	-	இடங்கழியார்
பூசம்	-	சத்தியார்
அனுடம்	-	பூசலார்
மூலம்	-	ஐயடிகள்காடவர்கோன்

கார்த்திகை: 5

கார்த்திகை	-	கணம்புல்லர்
உத்திரம்	-	மெய்ப்பொருளார்
அத்தம்	-	ஆனாயர்
மூலம்	-	மூர்க்கர்
பூராடம்	-	சிறப்புலியார்

மார்கழி: 5

திருவாதிரை	-	சடையநாயனார்
உத்திரம்	-	இயற்பகையார்
சுவாதி	-	மானக்கஞ்சாறர்
பூராடம்	-	சாக்கியர்
இரேவதி	-	வாயிலார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை - நாகை மாவட்டம்.

அருள்திரு மாதவச் சிவஞான யோகிகள் சித்திரை ஆயிலியம் சிறப்பு வழிபாட்டு விழா அழைப்பிதழ்

அருள்திரு மாதவச் சிவஞான யோகிகள்

வேதப் பொருளுணர்ந்தேம் மேவு சிவாகமத்தின்
நீதில் பொருளும் தெளிந்துய்ந்தேம் - ஏதுகுறை
தெற்றிசூழ் சிங்கைச் சிவஞான மாமுனிவன்
பொற்றாமரை யடிக்கீழ்ப் புக்கு.

மாதவச் சிவஞானயோகிகள் துதி

நாள்: 12.05.2008 – திங்கள்கிழமை
நிகழ்ச்சி: விக்கிரமசிங்கபுரம், சுசீந்திரம், காஞ்சிபுரம், திருவாவடுதுறை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சிவமயம்

அருள்திரு மாதவச் சிவஞான யோகிகள் வரலாற்றுச் சுருக்கம்

(காலம் கி.பி. 1753 - 1785)

தமிழ்நாட்டின் திருநெல்வேலி மாவட்டத்தில் பொதியில் மலைச் சாரவில் உள்ள திருத்தலம் பாவநாசம். அதனை அடுத்து விளங்குவது விக்கிரமசிங்கபுரம். அவ்வூரில் பரம்பரைச் சைவ வேளாண் குடியில் ஆனந்தக்கூத்தர் மயிலம்மையார் இருவர்க்கும் திருமகனாகச் சித்தாந்த சைவம் சிறந்து விளங்கத் தோன்றியருளினார் நம் முனிவர் பெருமான். அவருக்குப் பெற்றோர் இட்ட பெயர், பாவநாசத்தில் கோயில் கொண்டருளும் பெருமான் திருப்பெயராகிய **முக்களாலிங்கர்** என்பது.

ஒரு நாள் அவர் பள்ளி சென்று மீளும் வழியில் திரு ஆவடுதுறை முனிபுங்கவர் சிலரைக் கண்டார். அவரைத் தம் இல்லத்திற்கு எழுந்தருளிச் செல்ல அன்பொடும் வேண்டினார். அவரும் இசைந்து சென்றனர். அப்போது தந்தையார் இல்லத்தில் இல்லை. மகனார் விருப்பின்படி அன்னையார் அடியவர்க்கு இன்னமுது அளித்து மகிழ்ந்தனர்.

பக்குவம் முதிர்ந்த திருமகனார் முனிவர்களுடன் செல்ல ஆர்வம் கொண்டார். பெற்றோர் இசைவுடன் முனிபுங்கவரொடும் புறப்பட்டார். தலங்கள் பல வழிபட்டுச் சுசீந்திரம் அடைந்தனர். அங்கு ஆதீனக் கிளை மடத்தில் எழுந்தருளியிருந்த இளைய சன்னிதானம் அருள்திரு பேரூர் வேலப்ப தேசிக சுவாமிகளை வணங்கி வழிபட்டார் முக்களாலிங்கர். அவரைத் தமக்கு ஞானாசிரியராகக் கொண்டார். தமிழ் இலக்கிய இலக்கணங்கள் புராணங்கள் திருமுறைகள் சாத்திரங்களில் சிறந்த அறிவு பெற்றார். வடமொழி, ஆகமங்களிலும் வல்லுநர் ஆனார்.

முக்களாலிங்கரின் பரிபக்குவம் கண்ட தேசிகர் அவருக்கு ஞான தீக்கை செய்வித்துச் **சிவஞான யோகி** என்ற தீக்கைத் திருப்பெயரும் சூட்டினார். பின்னர்த் தம் ஞானாசிரியரோடும் மற்றும் தம்பிரான் சுவாமிகளோடும் யோகிகள் துறைசை ஆதீனம் அடைந்தனர். ஆதீனத்தில் இருந்து கொண்டும் காஞ்சி முதலான திருத்தலங்கள் சென்று தங்கியும் தமிழுலகிற்கும் சைவ உலகிற்கும் ஆக்கம் தரும் செந்தமிழ் நூல்கள் பல (28) செய்தருளினார். கவிராட்சச கச்சியப்ப முனிவர், தொட்டிக்கலை சுப்பிரமணிய முனிவர் முதலான பன்னிருவர் யோகிகளின் சிறந்த மாணாக்கராகி உலகப் புகழ் பெற்றனர்.

மெய்கண்ட தேவர் அருளிய சிவஞானபோதத்தின் உண்மைப் பொருளைச் சிவஞான போதச் சிற்றுரை, சிவஞான பாடியம் என்னும் பேருரை ஆகியவற்றால் தெளிவும் திட்பமும் உறச் செய்த பெருமை மாதவச் சிவஞான யோகிகட்கே உரியதாகும்.

சித்தாந்த சைவப் பேரொளியாக விளங்கும் அருள்திரு மாதவச் சிவஞான யோகிகள் சகாத்தம் 1708 விசுவாவசு சித்திரை எட்டு ஞாயிற்றுக்கிழமை ஆயிலியத் திருநாளில் (17.04.1785) திரு ஆவடுதுறையில் சிவானந்தப் பெருவாழ்வில் கலந்தருளினார். அன்னார் திருவடி மலர்களை வாழ்த்தி வணங்கி உய்வோமாக !

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
திருவாவடுதுறை - நாகை மாவட்டம்

செந்தமிழ்ச் சிவஞானபாடியம் அருளிச் செய்த
அருள்திரு மாதவச் சிவஞான யோகிகள்
சித்திரை ஆயிலியம் சிறப்பு வழிபாட்டு விழா

நிகழும் சர்வதாரி ஆண்டு, சித்திரைத் திங்கள் 30ஆம் நாள்
12.05.2008, திங்கள்கிழமை

அருள்திரு மாதவச் சிவஞான யோகிகள் சிவப்பேறு எய்திய ஆயிலியத் திருநாளில் 223ஆம் ஆண்டுச் சிறப்பு வழிபாடு

யோகிகள் தோன்றியருளிய	-	விக்கிரமசிங்கபுரம்
துறவுநிலை பூண்ட	-	சுசீந்திரம்
நெடுநாள் வாழ்ந்த	-	காஞ்சிபுரம்
சிவன்சேவடி சேர்ந்த	-	திருவாவடுதுறை

ஆகிய நான்கு தலங்களிலும்

ஆதீனத்து 23ஆவது குரு மகாசன்னிதானம்

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்

அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம்
நிகழ்ச்சி நிரலில் உள்ளவாறு திருநீராட்டும் வழிபாடும்,
சிறப்புச் சொற்பொழிவும்,
செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம் (உரையுடன்)
என்னும் விழாமலர் வெளியீடும் நிகழும்.
அன்பர்கள் அனைவரும் வந்து வழிபாட்டில் கலந்து கொண்டும்
சொற்பொழிவுகளைச் செவிமடுத்தும் சிவஞானப்
பெரும்பேற்றில் திளைத்து இன்புற விரும்புகின்றோம்.

இவ்வண்ணம்,
காறுபாறு – வைத்தியநாதத் தம்பிரான்,
திருவாவடுதுறை ஆதீனம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விக்கிரமசிங்கபுரம்
12.05.2008 - திங்கள்கிழமை

காலை 10.00 திருநீராட்டும் வழிபாடும்

பகல் 12.05 மாகேசுவர பூசை

மாலை 06.00 திருமுறை விண்ணப்பம்
தேவார இசைமணி.திரு.வா. சுப்பிரமணிய ஓதுவார் அவர்கள்,
அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், குறுக்குத்துறை.

6.30 வரவேற்புரை
சீர்மன்னு.சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்,
திருவாவடுதுறை ஆதீனம்.

6.45 சிறப்புரை
உயர்திரு. எஸ். மீனாட்சி சுந்தரம், பி.எஸ்ஸி, பி. எல்,
டிப்.ஏடிஆர், அவர்கள்,
வழக்குரைஞர்,
உயர்நீதிமன்றம், மதுரைப்பலகை, மதுரை.

7.00 சிறப்புச் சொற்பொழிவு
சிவத்தமிழ்ச் செல்வர்,
முனைவர். சிவத்திரு.ஆ. ஆனந்தராசன், அவர்கள்
பேராசிரியர் பணிநிறைவு, (சைவசித்தாந்தத் துறை)
மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை.
- பாடியத்துள் அளவை வழி சித்தாந்தம்.

8.00 மகிழ்வுரை
சிவத்திரு. க. சண்முகம், டி.சி.டி.எம்., அவர்கள்,
துறைசை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப்
பயிற்சிமையப்பேராசிரியர், விக்கிரமசிங்கபுரம்.

8.15 குருமரபு வாழ்த்து

இரவுப் பூசை நிறைவில்
சீர்மன்னு சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்
செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம் (உரையுடன்)
என்னும் விழா மலரை வெளியிட
சிறப்புரையாற்றிய
உயர்திரு. எஸ். மீனாட்சி சுந்தரம், அவர்கள்,
முதல் பிரதியைப் பெற்று சிறப்பிக்கின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சுசீந்திரம்
12.05.2008 - திங்கள்கிழமை

காலை 10.00 திருநீராட்டும் வழிபாடும்

பகல் 12.05 மாகேசுவர பூசை

மாலை 06.00 திருமுறை விண்ணப்பம்
தேவார இசைமணி.திரு. தம்பையா ஓதுவார் அவர்கள்,
அருள்மிகு தாணுமால் அயன் திருக்கோயில், சுசீந்திரம்.

6.30 வரவேற்புரை மற்றும் வாழ்த்துரை
செங்கோல் ஆதீனம் குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சத்தியஞான
பண்டார சந்நிதி அவர்கள்,

6.45 சிறப்புரை
உயர்திரு. சி.பெருமாள்சுவாமி,எம்.ஏ.,எம்.எல்.,எம்.பில்.அவர்கள்,
இணை ஆணையர் / செயல் அலுவலர்
இணைக்கப்பட்ட, இணைக்கப்படாத
திருக்கோயில்கள், சுசீந்திரம்.

7.00 சிறப்புச் சொற்பொழிவு
சித்தாந்தச் செம்மணி
முனைவர்.சிவத்திரு. பழ. முத்தப்பன் அவர்கள்,
துறைசை ஆதீன சைவ சித்தாந்த நேர்முகப்
பயிற்சி மையப் பேராசிரியர், மயிலாடுதுறை.
- பாடியத்துள் அளவை வழி சித்தாந்தம்.

8.00 மகிழ்வுரை
திரு. எஸ்.பி. சண்முகம் அவர்கள்,
அமைப்பாளர், துறைசை ஆதீன சைவ சித்தாந்த
நேர்முகப் பயிற்சி மையம், சுசீந்திரம்.

8.15 குருமரபு வாழ்த்து

இரவுப் பூசை நிறைவில்
செங்கோல் ஆதீனம் குரு மகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ கல்யாண சுந்தர சத்தியஞான பண்டார சந்நிதி அவர்கள்
செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம் (உரையுடன்)
என்னும் விழா மலரை வெளியிட்டருள, சிறப்புரையாற்றிய
உயர்திரு. சி. பெருமாள் சுவாமி, அவர்கள்
முதல் பிரதியைப் பெற்று சிறப்பிக்கின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருவாவடுதுறை
12.05.2008 - திங்கள் கிழமை

காலை 10.00 **யோகிகளின் ஞான சமாதித் திருக்கோயிலில் திருநீராட்டும் வழிபாடும்**

பகல் 12.05 **திருமடத்தில் மாகேசுவர பூசை**

மாலை 06.00 **திருமுறை விண்ணப்பம்**
தேவார இசைமணி, சிவத்திரு,
திருஞானசம்பந்த ஓதுவார் அவர்கள், சென்னை.

6.30 **வரவேற்புரை**
புலவர். சீர்மன்னு. **சுயம்புநாதத் தம்பிரான்சுவாமிகள்** அவர்கள்,
திருவாவடுதுறை ஆதீனம்.

6.45 **சிறப்புரை**
திருமிகு. **கே. வைத்தியநாதன்,** அவர்கள்,
முதன்மைஆசிரியர், தினமணிநாளிதழ், சென்னை.

7.00 **சிறப்புச் சொற்பொழிவு மற்றும் நூல் அறிமுகம்**
ஆதீனப் புலவர். சிவஞான சுவாமிகள் அடிப்பொடி
சிவத்திரு.சு. **குஞ்சிதபாதம்,** அவர்கள்,
திருவாவடுதுறை.
- **பாடியத்துள் அளவை வழி சித்தாந்தம்**
- **நூல் அறிமுகம்** - *செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம்.*

8.15 **மகிழ்வுரை**
நல்லாசிரியர், பெருஞ்சொல்மணி
புலவர். சிவத்திரு. தா. சுப்பிரமணியம் அவர்கள்,
தலைவர், நால்வர்நற்றமிழ்மன்றம், காஞ்சிபுரம்.

8.30 **குருமரபு வாழ்த்து**

இரவுப் பூசை நிறைவில்
சீர்வளர்சீர் குருமகா சன்னிதானம் அவர்கள்
செப்பறை அகிலாண்டேசுவரி பதிகம் (உரையுடன்)
என்னும் விழா மலரை வெளியிட்டருள சிறப்புரையாற்றிய
திருமிகு. **கே. வைத்தியநாதன்** அவர்களும்,
சிவநெறிச்செல்வி. திருமதி. டாக்டர். இராசம் சேதுராமன், எம்.பி.பி.எஸ்., [மதுரை மீனாட்சி மிஷன் மருத்துவமனை] அவர்களும்,
பிரதியைப் பெற்று சிறப்பிக்கின்றார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னர் காஞ்சிபுரம். புலவர். சிவத்திரு. தா. சுப்பிரமணியம், அவர்களுக்கு அருள்திரு நமசிவாய மூர்த்திகள் அருட்கவசமாகப் பொன்னாடை அணிவித்துப் பொற்கிழி ரூபாய் மூவாயிரமும் சித்தாந்தச் செம்மணி என்னும் சிறப்பு விருதும், யோகிகளின் சிறப்பு வழிபாட்டு விழா நினைவுக் கட்டுரைப் போட்டியில் வெற்றிபெற்ற முதல் மூவர்க்கு நற்சான்றிதழுடன் அருட்கொடை, அருள்நூல்கள் வழங்கியும் வாழ்த்தியருளுகின்றார்கள். தொடர்ந்து

கோவில்பட்டி திருமுறை மன்றம் தயாரிப்பில் வெளிவரும்

1. சிவஞான சுவாமிகள் தோத்திரத் திரட்டு பண்ணிசை
   - பாடியவர் - *திரு. சிங்கை. சௌந்தராஜன்.*
2. சிவஞான போதம் - சொற்பொழிவு - *திரு. சு. குஞ்சிதபாதம்.*
3. திருவருட் பயன் - சொற்பொழிவு - *திரு. சு. குஞ்சிதபாதம்.*
4. அம்பலவாணதேசிகர் அருளிய தசகாரியம் - சொற்பொழிவு
   - *திரு. சு. குஞ்சிதபாதம்.*
5. சைவசமயச் சிந்தனை - சொற்பொழிவு - *திரு. சு.குஞ்சிதபாதம்.*
6. சமயக் கல்வி - சொற்பொழிவு - *திரு. ச. சண்முகவேல்.*

முதலான குறுந்தகடுகளை

சீர்வளர்சீர் குருமகாசன்னிதானம் அவர்கள் வெளியிட்டருள முக்கியப் பிரமுகர்கள் பெற்று சிறப்பிக்கின்றார்கள்.

முன்னைய ஆண்டுகளில் சிவஞானசுவாமிகள் சித்திரை ஆயிலியம் சிறப்பு வழிபாட்டு விழாவில் சிறப்பினைப் பெற்றார்.

சிவத்திரு. சி. அருணைவடிவேல் முதலியார், காஞ்சிபுரம்.	1995
சிவத்திரு. தத்புருஷ தேசிகர், தேவக்கோட்டை.	1996
சிவத்திரு. சித்தலிங்கையா, காஞ்சிபுரம்.	1997
சிவத்திரு. சபாரத்தினம், சென்னை.	1998
சிவத்திரு. ர. வையாபுரி, கோயம்முத்தூர்.	1999
சிவத்திரு. டி.சி.எஸ். இராமசங்கு பாண்டியன், தூத்துக்குடி.	2000
சிவத்திரு. டான்ஸ்ரீ.மு. சோமசுந்தரம், மலேசியா.	2001
சிவத்திரு. இ. நமசிவாயம், இலங்கை.	2002
சிவத்திரு. ஆதி. முருகவேள், திருச்சிராப்பள்ளி.	2003
சிவத்திரு. டி.என். இராமச்சந்திரன், தஞ்சாவூர்.	2004
சிவத்திரு. திருநாவுக்கரசு, மயிலம்	2005
சிவத்திரு. மா. அமிர்தலிங்கம், சின்னகாஞ்சிபுரம்.	2006
சிவத்திரு. சோ. ந. கந்தசாமி, தஞ்சாவூர்	2007

[2003ஆம் ஆண்டு முதல் சிறப்புக்களுடன் விருதும் வழங்கியருளப்பெறுகிறது]

ஸ்ரீ நமசிவாயமூர்த்தி அச்சகம், திருவாவடுதுறை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உரையாசிரியரின் விவரக்குறிப்பு :

பெயர் : **த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை**

பணி : திருவாவடுதுறை ஆதீனப் புலவர்

ஆசிரியர் : ஆதீனப் புலவராக இருந்த
ஸ்ரீ சு. பொன்னோதுவா மூர்த்திகள்

ஆற்றியுள்ள பணிகள் : சிவஞானபோதம், சிவஞானசித்தியார் முதலிய சித்தாந்த சாத்திரங்களைப் பல்வேறு பழைய உரைகளுடன் பதுப்பித்துள்ளமை, தணிகைப் புராணம், பேரூர்ப் புராணம் முதலிய சிறந்த புராண நூல்களைக் குறிப்புரையுடன் பதிப்பித்துள்ளமை. சோமேசர் முதுமொழி வெண்பா--விற்கு அரிய இலக்கிய மேற்கோள்களுடன் கூடிய சிறந்த உரையினை இயற்றியுள்ளமை. சைவ சமயச் சொற்பொழிவுகள் ஆற்றியுள்ளமை.

காலம் : 20-ஆவது, 21-ஆவது, 22-ஆவது
குருமகா சன்னிதானங்களின் அருளாட்சி காலங்கள்

பதிப்பாசிரியர் விவரக் குறிப்பு :

பெயர் : **சு. குஞ்சிதபாதம்**

தந்தையார் பெயர் : மா. சுப்பிரமணியன்

பிறந்த தேதி : 27.10.1965

கல்வித் தகுதி : எம்.எஸ்.சி., பி.எட்.,

பணி : திருவிடைமருதூர் – திருவாவடுதுறை ஆதீன
மேனிலைப் பள்ளியில் இயற்பியல் ஆசிரியர், ஆதீனப் புலவர்

எழுதியுள்ள நூல்கள் : சிவஞான முனிவர் காட்டும் சிவப்பிரகாசம் – ஆய்வு
சோமேசர் முதுமொழி வெண்பா – உரை
பண்டார சாத்திரங்கள் பதினான்கிற்கும் உரை
கலைசைப் பதிற்றுப் பத்தந்தாதி – உரை
உலகுடைய நாயனார் கழிநெடில் – உரை

பிற பணிகள் : சமயச் சொற்பொழிவுகள், பல்வேறு இதழ்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்குதல், மரபுக் கவிதைகள் இயற்றுதல்.

ஆசிரியர் : வித்துவான் ச. இரத்தினவேலன் அவர்கள், சங்கரன் கோயில்

சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளிய பேறுகள் :

1989 – ஆம் ஆண்டில் "சிவதீக்கை" 2004 – ஆம் ஆண்டில்
"ஆதீனப் புலவர் பட்டம்"

பெற்றுள்ள விருதுகள் :

சீர்வளர்சீர் குரு மகாசன்னிதானம் அவர்கள் அருளிய
"சிவஞான சுவாமிகள் அடிப்பொடி" என்னும் சிறப்பு விருது.

மயிலை சின்னண்ணன் மரபினர் வழங்கிய
"சைவ சித்தாந்த ஞானச் செல்வர்" என்னும் விருது